விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (25.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## வவுனியா உண்ணாவிரதப் போராட்டத்தில் பெருமளவான பொது மக்கள் பங்கேற்பு






(வவுனியா)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நேற்று வவுனியாவில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர் .

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களானசுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசத்தி ஆனந்தன்,எஸ். சரவணபவன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் (02ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் போராட்டம் ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தம்

### அரசின் வாக்குறுதியை அடுத்து

(கொழும்பு)

அரசாங்கத்தின் வாக்குறுதியை அடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடுக்க பிரி. வலியுறுத்தல்

(கொழும்பு)

வடக்குக்கிழக்குப்பகுதிகளில் காணப்படும் இராணுவப் பிரசன்னத்தை இலங்கையின் ஏனைய மாவட்டங்களுக்கும் நகர வைக்க இலங்கை நடவடிக்கை எடுக்கும் என தாம் நம்புவதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரென்கின் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா உள்ளிட்ட ஏனைய வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் இலங்கையில் மீண்டும் செயற்பட முனைந்தால் மேற்கூறிய விடயம் தடையாக இருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்குக் கிழக்கைப் போன்று ஏனைய பகுதிகளிலும் இராணுவ பிரசன்னத்தில் சமநிலை பேணப்படாவிட்டால் வன்னி மற்றும் யாழ். (02ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தர் தலைமையிலான குழு யாழ்.கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர்பரமலிங்கம்தர்ஷனந்பல்கலைக் கழகம் வரும் வழியில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டமை தொடர்பாகவும், அதனால் மாணவர் மத்தியில் எழுந்துள்ள அச்சநிலைமையைப் போக்கும் வகையிலும், எதிர்காலத்தில் மாணவர்கள் சுமுகமாகக் கல்வி கற்கக் கூடிய ஒரு சூழ் நிலையைக் கொண்டு வரும் நோக்கிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் பீடாதிபதிகள், மாணவர்கள் சங்கங்களின் பெரும் பொருளாளர்கள், மாணவர் சங்கங்களின் தலைவர்கள் அடங்கிய குழு யாழ்ப்பாண படைத்தளபதியுடன் நேற்று முந்தினம் யாழ்ப்பாண சிவில் நிர்வாக அலுவலகத்தில் சந்திப்பொன்றை மேற்கொண்டது.

மேற்படி சந்திப்பில் துணைவேந்தர் தலைமையிலான (02ஆம் பக்கம் பார்க்க)

## சரத்துக்கு ஜெனரல் பதவி மீண்டும் வழங்க சாத்தியமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை நிராகரிக்கும் வகையில் இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த எந்த வொரு ஜனாதிபதியும் நடந்து கொள்ள வில்லை. சரத் பொன்சேகா விடயத்திலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறே நடந்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், இராணுவநீதிமன்றதீர்ப்பின் பிரகாரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் தமிழ் கல்வெட்டுக்கள்

(பொலநறுவை)

பொலநறுவையில் அமைந்திருக்கும் மூன்று ஆலயங்களில் உள்ள வாசிக்கப்படாத கல்வெட்டுக்களை பேராதனைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் கண்டுபிடித்துள்ளார்.

பொலநறுவையில் மூன்றாம், ஐந்தாம் சிவாலயம் மற்றும் நான்காம் விஷ்ணு கோவில் என்பவற்றில் இச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் (02ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவை திருப்திப்படுத்த தவறியுள்ள பீரிஸ் தலைமையிலான குழு

### ஊடகங்களில் விபரிப்பு

(கொழும்பு)

போருக்குப் பின்னரான இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அமெரிக்காவைத் திருப்திப்படுத்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் தவறிவிட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கடந்த வாரம் வாஷிங்டன் சென்றிருந்த பீரிஸ் தலைமையிலான குழுவினர், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

ஆயினும் போருக்குப் பின்னரான முன்னேற்றங்கள் தொடர்பில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில், பீரிஸ் தலைமையிலான குழுவினரின் வாஷிங்டன் விஜயம் அமையவில்லை என அமெரிக்க அதிகாரிகள் கருவதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது பீரிஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு படகுகள் மாயமாகின

## வடமராட்சியில் சம்பவம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற் தொழிலாளர்களுக்கு சொந்தமான இரு படகு இயந்திரங்கள் காணாமல் போயுள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் பாலா தெரிவித்தார்.

கடந்த 22ஆம் திகதி அட்டைத் தொழிலுக்கு சென்றுவிட்டு வந்து கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தங்கவேலு தங்காதரன் என்பவரது ஒரு படகும்,

நேற்று முன்தினம் வழிச்சல் தொழிலுக்கு சென்றுவிட்டு வந்து கரையோரமாக நங்கூரமிடப்பட்ட நிலையில் தங்கவேலு தங்கநிதி என்பவரது படகும் காணாமல் போயுள்ளன.

இவ்விரு படகுகளும் காற்றுடன் சென்றுவிட்டதா அல்லது திருடப்பட்டுள்ளதா எனத் தெரியவில்லை.

இவ்விரு படகுகளையும் தேடும் பணியில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்கள் ஏமாற்றத்தையே எதிர்கொண்டனர்.

இவ்விரு படகுகளும் சுமார் ரூ.13 இலட்சம் பெறுமதியானது எனதெரிவிக்கப்பட்டது. (எ-3-64)

# காட்டு யானை தாக்கி சிறுவன் பலி

## உறக்கத்தில் இருந்தபோது கொடூரம்

அம்பாறை பன்னலக பிரதேசத்தில் நேற்று அதிகாலை காட்டு யானை குடிமனைக்குள் உட்புகுந்து தாக்கியதில் நான்கு வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன் அச்சிறுவனின் தந்தையார் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் என தமண பொலிஸார் தெரிவித்தனர்.

தமண பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பன்னலகம பிரதேசத்தில் நேற்று வியாழக் கிழமை அதிகாலை 3 மணிக்கு வீட்டுக்குள் புகுந்த காட்டு யானை, வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்களை தாக்கியது.

இதனால் நான்கு வயது சிறவன் உயிரிழந்ததுடன் தந்தையார் படுகாயமடைந்துள்ளார். அவ்வீடு பாரிய சேதமடைந்துள்ளது. வீட்டிலிருந்த ஏனையவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இத்தாக்குதலில் காயமடைந்தவர் அம்பாறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (எ-11)

## வவுனியா உண்ணாவிரத...

மனோ கணேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் சிறி ரங்கா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜி லிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னிட்டு வவுனியா நகர சபை மைதானப் பகுதியில் பொலிஸார் பெருமளவில் குவிக்கப் பட்டிருந்தனர். நகர சபையின் பிரதான வாயிலிலும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இப்போராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு மகசீன் சிறைச்சாலை, கொழும்பு தடுப்புக் காவல் சிறைச்சாலை, அனுராதபுரம், களுத்துறை, வவுனியா, கண்டி உள்ளிட்ட நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள 800க்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களில் பல நூறு பேர் எந்தவித விசாரணையும் இல்லாமல் பல வருடங்களுக்கு மேலாக இன்னமும் சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். இன்னும் ஆயிரக்கணக் கான இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் போயுமுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகள் பலமுறை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்துள்ளனர். இந்த விடயத்தில் அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர்கள் உறுதிமொழி வழங்கியும்கூட எதுவுமே நடக்கவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் பலர் அங்கவீனமுற்றவர்களாகவும், பல பெண்கள் திருமணம் செய்து குழந்தை உள்ளவர்களாகவும் சிறையில் வாடுகின்றனர். பல இளைஞர்கள் குடும்பப் பொறுப்பை சுமப்பவர்களாக உள்ளனர். இவர்களை எந்தவித விசாரணைகளுமின்றி சிறைச்சாலையில் அடைத்தது வைத்திருப்பதனால் அவர்களது முழு வாழ்க்கையுமே அழிந்து சின்னாபின்னமாகியுள்ளது.

இதனையடுத்து அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி நேற்று போராட்டம் இடம்பெற்றுள்ளது. (எ-11)

## புலிகளை...

பகுதிகளில் அதிக இராணுவம் இருப்பது வெளிப்படையாகத் தெரியவரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை முழுவதும் ஒரே வகையான இராணுவ முகாம்கள் பராமரிக்கப் படுவது அவசியம் என ஜோன் ரென்கின் கூறியுள்ளார். (எ-11)

## பொலநறுவை..

சந்திப்பின்போது பேராசிரியர் இந்த தகவலை தெரிவித்தார்.

இச்சாசனங்கள் பலவருடங்களுக்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கால ஓட்டத்தில் எழுத்துக்கள் இயற்கைக் காரணிகளால் சிதைவடைந்துள்ளன.

எனினும் நுட்பமான முறையில் படிமம் எடுக்கப்படும் பட்சத்தில் அவற்றில் எழுதப்பட்டிருப்பவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என பேராசிரியர் சி.பத்மநாதன் தெரிவித்தார். (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா. சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்

கலகலப்பு

மசாலா கபே

இலங்கை இந்திய ஒரே வெளியீடு

10.30, 2.30, 6.30

D.T.S



பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில்

பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் பாரதியார் பல்கலைக்கழக பட்டப்படிப்புகளை மேற்கொள்ள விரும்பவோர் 26 மே 2012 சனிக்கிழமை மாலை கல்வி சான்றிதழ் நான்கு புகைப்படங்கள் கட்டணத்துடன் நேரடியாக வருகைதரவும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085, 021 7200898


## இதய அஞ்சலி



எமது கல்விக் கோட்ட

மெய்கண்டான் வித்தியாசாலையின் அதிபர்

**திருமதி பு. சந்திரராசா**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவக்கொழுந்து ஐயம்பிள்ளை**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கல்விக் கோட்டம்
காரைநகர்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கோட்டப் பாடசாலை அதிபர்கள்
ஆசிரியர்கள்.

(8513)

# இசற் புள்ளி நெருக்கடியை ஆராய குழு நியமிக்க அனுமதி மறுப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்ட போது ஏற்பட்ட இசற் புள்ளி நெருக்கடி தொடர்பாக ஆராய்வதற்கு, குழுவொன்றை அமைக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சினால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் கோரிக்கை உயர் நீதிமன்றத்தினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது. உயர் கல்வி அமைச்சர் சட்டமா அதிபரின் ஊடாகவே இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் தவறுகள் இருப்பதாக தெரிவித்து, கடந்த ஜனவரி 23 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணைகள் கடந்த மே 10ஆம் திகதி வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தது.

உயர் கல்வியமைச்சருக்கு ஏதேனும். கருத்துக்கள் கூறவேண்டியிருந்தால் அந்த காலப்பகுதியில் அவற்றை நீதிமன்றில் வெளிப்படுத்தியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவிக்காது வழக்கின் தீர்ப்பிற்காக கால நியமம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான மனுவொன்றை தாக்கல் செய்வதற்கு அமைச்சருக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை என பிரதம நீதியரசர் தலைமையிலான மூவர் கொண்ட நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் உயர் கல்வியமைச்சருக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்றும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கே இந்த அதிகாரம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதேவேளை இவ்வாலய மஹோற்சவ விழா இம்முறை அலங்கார உற்சவமாக இன்று தொடக்கம் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (எ)

## துணைவேந்தர்...

குழுவினருக்கும் யாழ்.மாவட்ட படைத் தளபதிக்கும் இடையில் மாணவர்களின் நலன் தொடர்பான கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்றன.

இதில் மாணவ தலைவர்கள் தமது அச்ச நிலைக்கு காரணமாகவுள்ள விடயங்களை உரிய தரப்பினருக்கு தெளிவாக எடுத்துரைத்தனர்.

பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இடையூறின்றித் தொடர்வதற்கு, மாணவர்களாலும் துணைவேந்தர் குழுவினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைச் செவிமடுத்த படைத் தளபதி அது தொடர்பாகத்தான் கூடிய கவனம் எடுத்து எதிர்காலத்தில் மாணவர்கள் சுமூகமான சூழ்நிலையில் கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்க பூரணமான ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். (ந)

## சென்னை-டில்லி இன்று மோதல்

(சென்னை)

ஐ.பி.எல். அரையிறுதிப் போட்டி இன்று இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெறுகிறது.

இந்த ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதுகின்றன.

இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணி நாளை மறுதினம் சென்னையில் நடை பெறும் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணியுடன் மோதும்.


சவுதி அரேபியா விமான நிலையத்தில்

SAUDI ARABIAN AIRLINES



GROUND SERVICES
உடனடி தொழில் வாய்ப்பு

GENERAL WORKERS - 350 Nos.
பொது வேலையாட்கள் - 350 பேர்

சம்பளம் – SR 690/-
1 SR = Rs. 34/-

TEC. OPERATOR / DRIVERS - 50 Nos.
தொ.இயக்குனர் /சாரதிகள் - 50 பேர்

சம்பளம் – SR 1609/-
1 SR = Rs. 34/-

Terms & Conditions:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
ரூபா : 80,000/- மட்டுமே அறவிடப்படும்

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: 0779283535

QP Employment (pvt) Ltd,
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/05/12

# இன்று ஒரு தகவல்

## அணுகுமுறை

ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றி அவருடைய தோழர்கள் அமர்ந்திருந்தார்கள்.

ஏதோ ஒரு முக்கியமான செய்தியை அவர் தோழர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் யாரோ ஒருவர் வேகமாக ஓடி வந்தார். வந்தவர் "எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டே நின்றார். ஆனால், அவரது குரல் மிரட்டுகிறது மாதிரி இருந்தது.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் ஆத்திரமடைய வில்லை. ஆனால், அவரைச் சுற்றியிருந்தவர்கள் ஆத் திரமடைந்தார்கள்.

இதைப் பெரியவர் அவதானித்து விட்டு சிறிதுநேரம் அமைதியாக இருங்கள் என்றார். வந்தவரை அழைத்தார். அவருக்குச் சில பொருட்களைக் கொடுத்தார்.

"இப்போது உங்களுக்கு மகிழ்ச்சிதானே?" என்றார்.

"ம்... ம்...!" என்று அலட்சியமாகப் பதிலளித்தார்.

சுற்றியிருந்தவர்களாலே இதைப் பொறுத்திருக்க முடியவில்லை. கோபத்தோடு அவரை நெருங்கினர். அந்தப் பெரியவர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

வந்தவரை தன்னுடன் அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றார். அங்கே சென்றதும் மேலதிகமாக சில பொருட் களை எடுத்து அவரிடம் கொடுத்தார்.

"இப்போது திருப்திதானே..: நான் உங்களிடம் நல்ல முறையில் நடந்திருப்பதுபோல் தெரிகிறது" என்றார்.

இதைக் கேட்டதும் அவரது முகம் மலர்ந்தது... "மிகவும் நல்லது. இறைவன் உங்கள் குடும்பத்திற்கு எல்லா நன்மைகளையும் அருள்வார்!" என்றார்.

"இதே வார்த்தைகளை என்னுடைய தோழர்களிடமும் கூறினால், அவர்களின் கோபம் தணிந்து விடும். வரமுடியுமா?" என்று கேட்டார்.

மறுநாட்காலையிலே அந்த இடத்துக்கு வந்தார். அதே மாதிரி சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

தோழர்கள் அவர் வார்த்தைகளைக் கூறியதும் வியப்புடன் பார்த்தார்கள்.

அந்தப் பெரியவர்தான் நபிகள் நாயகம்.

அவர் ஒரு கதை கூறினார். ஒருவன் மிகவும் ஆசையாக ஒரு ஒட்டகத்தை வளர்த்து வந்தான்.

ஒருநாள் ஒட்டகம் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிச் சென்றது.

அயலில் இருந்தவர்கள் அதைப் பிடிக்க முயற்சியெடுத்தார்கள். ஒட்டகம் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் அதை வளர்த்தவன் அங்கே ஓடி வந்தான்.

"நீங்கள் அதை ஒன்றுமே செய்ய வேண்டாம்... அதன் சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறினான்.

எல்லோரும் அதை விட்டு விட்டு விலகிச் சென்றார்கள்.

இவன் சிறிது புல்லை கையில் எடுத்துக்கொண்டு அந்த ஒட்டகத்தின் அருகே சென்றான். அவ்வளவுதான்! அது ஓடி வந்து இவன் காலடியிலே உட்கார்ந்தது. செல்லமாக அதைத் தடவி முதுகிலே ஏறி அமர்ந்தான். அது சாதுவாக தனது நடை பயணத்தை ஆரம்பித்தது.

"ஒட்டகத்தை மட்டும் அல்ல சில மனிதர்களையும் கூட சில விதத்திலே அணுகித்தான் அவர்களைச் சீர்திருத்த வேண்டியிருக்கும்" என்பதையும் அவர்களுக்கு உணர்த்தினார்.

சில குடும்பத் தலைவர்கள் கூட இந்த ஒட்டகம் மாதிரி நடப்பதுண்டு... அதன் பின்பு அடங்கிப் போவதுமுண்டு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காலபோகத்தில் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாது விவசாயிகள் அவதி

(மல்லாவி)

வன்னிப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை விற்க முடியாது விவசாயிகள் இடத்துக்கு இடம் காவிச் சென்றும் விற்க முடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பணம் செலவு செய்த பின்பு பலனேதுமின்றி திரும்ப வேண்டிய அவலநிலை உள்ளதாக அவர்கள் கவலை அடைகின்றனர்.

இது தொடர்பாக தெரியவருவது, ஒலுமடு, மாங்குளம், ஒட்டுசுட்டான், மல்லாவி, பாண்டியன்குளம், கனகராயன் குளம் உட்பட வன்னிப்பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் காலபோகத்தில் அறுவடை செய்த நெல்லையே விற்க முடியாதுள்ளனர்.

இதேவேளை, மாங்குளத்தில் இருந்த அரச நெல் கொள்வனவு மையம் நெல்லைக் களஞ்சியப்படுத்த போதியளவு இடம் இல்லையென்ற காரணத்தால் கொள்வனவை நிறுத்தியுள்ளது.

ஒலுமடுவில் தற்காலிக களஞ்சியம் அமைத்து நெல் கொள்வனவு செய்தபோதும் பணம் இல்லை என்ற காரணத்தினால் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒட்டுசுட்டான், முள்ளியவளை நெல் கொள்வனவு மையங்களுக்கு நெல்லை விற்பனை செய்வதற்கு சென்ற விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்யாது திருப்பி அனுப்பியுள்ளனர்.

இடப்பெயர்வின் பின் வங்கியில் இருந்து பணம் கடனாகப் பெற்று நெல் உற்பத்தி செய்த விவசாயிகள் மீளக்கடனை செலுத்த முடியாத நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தற்பொழுது சிறுபோக நெற் செய்கைக்காகவும் மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் நிலை உருவாகி உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் கவனம் எடுத்து உடன் தீர்வினை பெற்றுத் தருமாறு கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-3-15)

# தேசிய டிப்ளோமாவை பூர்த்தி செய்தவர்களுக்கு பட்டமளிப்பு

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 2005/2007,2006/2008, 2007/2009, 2008/2010 ஆகிய கல்வியாண்டுகளில் கற்பித்தலிலான தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான தேசிய டிப்ளோமா பட்டமளிப்பு விரைவில் நடைபெறவுள்ளது என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அதிபர் கே.பெனார்ட் அறிவித்துள்ளார்.

மேற்குறித்த 5 ஆண்டுகளில் கற்பித்தலிலான தேசிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்கள் பட்டமளிப்பு விழா பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட "9X4" அளவினதான கடித உறை ஒன்றினை பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பட்டமளிப்பு விழா என்று குறிப்பிடுவதுடன் தங்களது பயிற்சி நெறிக்கான கல்வி ஆண்டையும் குறிப்பிட்டு அனுப்பவும்.

நீண்ட காலத்தின் பின் இப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளதால் தேசிய டிப்ளோமாதாரிகளின் தற்போதைய முகவரிகளை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாலேயே இவ்விடயம் கவனத்தில் கொண்டு வரப்படுகிறது. பட்டமளிப்பு விழா நடைபெறும் இடம், காலம் என்பன பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 80-100 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 90 |
| தக்காளி | 160 | 170 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 60 | 60 | 100 |
| பூசணி | 25 | 20 | 40 |
| புடோல் | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 70-100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 |
| பயற்றங்காய் | 60-70 | 100 | 50 |
| லீக்ஸ் | -- | 150 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 200 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 160 |
| போஞ்சி | -- | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 |
| தேசிக்காய் | 150 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 16-20 |

# இராசி பலன்

*25.05.2012*
*(வைகாசி 12, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 10.55 மணிவரை*
*புனர்பூசம் முன்னிரவு 8.16 மணிவரை*
*இராகுகாலம் 10.22-11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52-7.22 மணிவரை*

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்கள் வாங்குவதில் பிரியம் காட்டுவீர்கள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், எடுத்த காரியங்கள் கைகூடும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்** வாக்கு மேன்மையுண்டு, பொருள் வெற்றிக்கு அத்திவாரமிடுவீர்கள், மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் நன்மையுண்டு.

**கடகம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நீங்கள் தேடிச் சென்று சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.

**சிங்கம்** காரிய அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவுண்டு.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் முத்தான வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை உயர்வடையும், உறவினர் வருகையால் உற்சாகமடைவீர்கள்.

**துலாம்** தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


**தனுசு** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கௌரவக்குறைவான நாள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சொந்த பந்தங்களின் வருகையுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நண்பர்கள் நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் நல்லவிதமாக முடியும்.

**மீனம்** பணவரவு திருப்தி தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 12

'உயிர் மீண்ட காளைமாடு' என்ற இத் தொடரை வாசிக்கின்ற உங்கள் ஆர்வத் துக்கு இடைஞ்சல் கொடுக்க நாம் விரும்பவில்லை.

இதன் காரணமாக லண்டன் வேல்ஸ் மற்றும் தமிழகத்தில் வேலூர் ஆகிய இடங்களில் காளை மாடுகள் பெற்றிருந்த சிறப்பை தொட்டுக்காட்டிய நாம், இப்போது உயிர்மீண்ட எங்கள் காளை மாட்டின் பக்கத்தைப் பார்க்கலாம்.

**காளைமாட்டின் பிறப்பு**

தென் பகுதியில் உள்ள கொட்டகல (Kotagala) என்ற இடத்தில் உள்ள போபத் தலாவை (Bopaththalawe) கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் 05.11.2003 அன்று இந்தக்காளைமாடு' பிறந்தது.

காளைமாட்டின் ஜனன நட்சத்திரம்- உத்தரட்டாதி, பிறப்பு எண்- 5, கூட்டெண்- 3.

பிறிசியன் (Friesian) என்ற ஐரோப்பிய இனக் காளைமாட்டிற்கும் சகிவல் (Sahiwal) என்ற இந்திய இனப் பசு மாட்டிற்கும் பிறந்த இந்தக் காளைமாடு திண்ணனார் போல பிறக்கும் போதே முப்பத்தாறு கிலோகிராம் (36 Kg) நிறையைக் கொண்டிருந்தமை எல்லோருக் கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

## கொட்டகலவில் பிறந்த காளைமாடு யாழ்ப்பாணத்திற்கு வந்த விதி யாதோ?

05 ஆம் திகதி நவம்பர் மாதம் 2003 ஆம் ஆண்டு பிறந்த இந்தக்காளை மாடு 20.05. 2005 அன்று குண்டகசாலைக்கு மாற்றப் பட்டது.

செயற்கைச் சினைப்படுத்தலுக்காக குண்டகசாலைக்கு மாற்றப்பட்ட இந்தக் காளைமாடு அங்கிருந்து யாழ்ப்பாணத்தி ற்கு மாற்றப்படும் வரை குண்டகசாலை யிலேயே வளர்க்கப்பட்டது.

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களம்



ஐரோப்பிய இனக்காளைமாட்டிற்கும் இந்திய இனப் பசுமாட்டிற்கும் பிறந்த இந்தக்காளை மாடு எதிர்பார்க்கப்பட்டதை விட மிக வேகமாக வளர்ந்ததுடன் நிறை யும் அதிகரித்தது.

எங்கள் மொழியில் கூறுவதாயின், நாளொருவண்ணம் பொழுதொரு மேனி யாக இந்தக் காளைமாடு வளர்ச்சி கண்டது.

காளைமாட்டின் உயரமும் அதன் நிறையும் அதிகமாக இருந்ததனால், இதற்குப் பொருத்தமான பசுவைத் தேடிப்பிடித்து திருமண பந்தத்தில் இணைத்துவிடுவது முடியாத காரியமாகவே இருந்தது.

செயற்கை முறைச் சினைப்படுத்தல் தவிர ஒரு கட்டைப்பிரம்மச்சாரியாகவே இந்தக் காளை மாடு வாழ்ந்து வருகின்றது என்பது வேறு கதை.

என்ன செய்வது, உடற்பருமனும் உயரமும் சேர்ந்த இந்தக்காளைக்கு இலங்கையிலே பொருத்தமான 'பசு' இல்லை என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தி விட்டது.

**யாழ்ப்பாணத்துக்கு வருகை**

குண்டகசாலையில் வாழ்ந்த இந்தக் காளை மாட்டிற்கு காலில் புண் ஏற்பட்டது. குண்டகசாலை கால்நடை மருத்துவர்கள் காளையின் கால்புண்ணை குணப்படுத்து வதற்கு படாப்பாடுபட்டனர். இருந்தும் கால்ப்புண் மாறுவதாக இல்லை. இதனைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவ விரிவுரையாளர்கள் சிகிச்சை அளித்தனர்.

23.04.2008 இலும் 29.07.2008 இலும் (Lameness and wounds at left hind) காலில் சத்திர சிகிச்சை செய்தனர். பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவபீட டாக்டர்களின் சிகிச்சையும் வெற்றி யளிக்காத நிலையில் காளைமாட்டை விற்பது என்ற தீர்மானம் வருகின்றது.

எனினும் அங்கிருந்தவர்கள் குறித்த காளைமாட்டை விற்பதைவிட யாழ்ப்பாணத் திற்கு அனுப்பிவைப்பது என கருத்துரைத் தனர்.

யாழ்ப்பாணக் கால்நடை உற்பத்தித் திணைக்களத்திற்கு காளைமாடு அனுப்ப வேண்டிய தேவையுள்ளது. எனவே, காலில் புண் உள்ள இந்தக் காளைமாட்டை அங்கு அனுப்பிவிடலாம் என்று குண்டகசாலை நிர்வாகம் தீர்மானிக்கின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவுற்ற நிலையில், இராணுவத்தினரின் வழித்துணையுடன் ஏ-9 பாதை வழியாகப் போக்குவரத்துச்சேவை மட்டுப்படுத்தப் பட்டளவில் இடம்பெற்றபோது, காளை மாட்டை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை குண்டக சாலை நிர்வாகம் செய்திருந்தது.

அதன் பிரகாரம் வாகனம் ஒன்றில் ஏற் றப்பட்ட காளைமாடு ஏ-9 வீதியூடாக 25.11. 2009 அன்று யாழ்ப்பாணத்திற்கு வந்துள் ளது.


யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள கால்நடை உற்பத்தித் திணைக்களத்திற்கு வந்த காளைமாட்டை அங்கிருந்தவர்கள் ஆச்சரியத்துடனேயே பார்த்தனர்.

940 கிலோகிராம் எடைகொண்ட இந்தக் காளைமாட்டை பராமரிப்பது, அதனைக் கட்டி அவிழ்ப்பது என அத்தனையும் சாதாரணமான விடயமாகத் தெரியவில்லை. இருந்தும் காளை மாட்டுடன் பழகியபோது தான் அது மிகவும் சாதுவான காளை என் பதை உணரமுடிந்தது.

தோற்றத்தை வைத்துக்கொண்டு தவ றான முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்ப தற்கு இந்தக்காளைமாடும் ஒரு எடுத் துக்காட்டு எனலாம்.

**கால்புண்ணுக்கு சிகிச்சை**

குண்டகசாலை கால்நடை மருத்துவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவபீட விரிவுரையாளர்கள் எனச் சகலராலும் காளைமாட்டின் கால் புண்ணுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அது சரிவரவில்லை.



பிறப்பு:-05.11.2003
பிறந்த இடம்:-கொட்டகல போபத்தலாவை, கால்நடை உற்பத்தித் திணைக்களம்
தந்தை:- பிறிசியன் (Friesian) , ஐரோப்பா
தாய்:-சகிவெல் (Sahiwal), இந்தியா
பிறப்பு நிறை-36 Kg
வாழ்வு:- 05.11.2003 -19.05.2005 (கொட்டகல)
20.05.2005-24.11.2009 வரை -குண்டகசாலை
25.11.2009 இல் யாழ்ப்பாணக் கால்நடை உற்பத்தித் திணைக்களம்

சுருங்கக்கூறின், காலில் புண் வந்தமை யால்தான் இந்தக்காளைமாடு யாழ்ப்பாணத் திற்கு வரவேண்டியதாயிற்று.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் பொறுப்ப திகாரியாக இருந்த கால்நடை மருத்துவர் பி. மகாதேவன் அவர்களை காளை மாட்டின் கால் புண்ணுக்கான சிகிச்சையை அளிக்கத் தொடங்கினார்.

கால்நடை மருத்துவர் பி.மகாதேவன் அவர்கள் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். தெய்வபக்தி இனிமையாகப் பேசும் இயல்பு கொண்டவர் இவரின் சிகிச்சை யால் காளைமாட்டின் புண் குணமடைந்தது.

டாக்டர் மகாதேவனின் சிகிச்சையில் காளையின் கால்புண் மாறிய அதிசயம் பேரா தனைக் கால்நடை மருத்துவ பீடத்தையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது என்றால் அது மிகைப் படுத்தலாக இருக்க முடியாது.

(வளரும்)

விதுரன்

# நுங்கினை வெட்டி விற்பனை செய்வது கர்ப்பத்தில் கருக்கலைப்புக்கு ஒப்பானது

## பனை அபிவிருத்திச் சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வியாபார நோக்கத்திற்காக நுங்கு அதிகளவில் வெட்டப்படுகின்றது. மருத்துவ ரீதியான சிறப்பான குணவியல் பினைக் கொண்டுள்ள இந்நுங்குக் குலைகள் வெட்டப்படுவதால் பனையின் இனப்பெருக்கம் அழிக்கப்படுகின்றது.

இது கண்டனத்திற்குரிய விடயமாகுமென பனை அபிவிருத்திச்சபை தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

பனைவித்தின் வளர்ச்சிப் பருவத்தில் பூ, குரும்பை, நுங்கு, பழம் என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதற் பருவம் பூந்துணர்கள். இவை கள், பதனீர் என்பன பெறப்பட்டு மென்பானங்கள், பனைவெல்லம், பனம்கற்கண்டு, பனம்பாணி என்பன உற்பத்தி செய்யப்படுவதற்காக சீவப்படுகின்றன. இதனால் இப்பனைகளிலிருந்து பழங்கள் உற்பத்தியாவதில்லை. பனைப்புரம்பலுக்கான செயற்பாடு இல்லை.

ஏனையவை சில தாக்கங்களினால் அழிந்து போக சிலர் சிறு குழந்தைகளின் மருத்துவத் தேவைக்காகவும் விருப்பத்திற்காகவும் வெட்டி அருந்துகின்றனர்.

இவற்றிலிருந்து மீள்சியடையும் நுங்குகள் முற்றி பழங்களாகி வீழ்வதினால் பனங்களி, பனாட்டு, பனங்கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல் என்கின்ற மிகுந்த ஊட்டச்சத்து மிக்க உணவுகளை பெறுகின்றோம். இதன் கழிவான ஊமல் சிறந்த எரிபொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

முளைத்திறன் அதிகமுள்ள வித்துக்கள் மாத்திரமே பனையாக வளர்கின்றது. பனைசார் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பனையாகும்.

நாம் ஒவ்வொருவரும் எமது பிரதேசத்தில் பனை வளர்த்தல் மிக அத்தியாவசியமான கடமையாக உணரப்பட வேண்டும். வியாபாரத்திற்காக பனைவித்தான நுங்கினை வெட்டி விற்பனை செய்வது கர்ப்பத்தில் கருக்கலைப்பு செய்வதற்கு சமமானதொன்றாக கருதக்கூடியதாக உள்ளது.

எனவே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசம், பனந்தொழில் வல்லுநர்கள், மக்களின் ஈடேற்றத்திற்காக பணியாற்றும் பத்திரிகைகள், ஊடகங்கள் பிரதேச வளமான அருங்கொடையாம் பனையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

கணபதி துணை

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2012



25.05.2012 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்

மாலை 04.00மணி

மாலை 6.00மணி தென்னிந்திய புகழ் செல்வி B.சுசித்திரா அவர்களின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

www.inuvilinfo.com இணுவில் (அ/001)

# சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சகபாடி ஆதரவு குழுக்கலந்துரையாடலும் படிமுறை விளக்க விழிப்புணர்வு செயலமர்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சிலாவத்துறை தமிழ் வித்தியாலயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கருத்துரைகளை முல்லைத்தீவு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் நவநீலன், வடமாகாண உள சமூக வள நிலைய உதவி முகாமையாளர் உதயகலா ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-3-266)

# இற்றைப்படுத்தலும் காட்சிப்படுத்தலும்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களது தரவுகளை இணையத் தளத்தில் இற்றைப்படுத்தலும் காட்சிப்படுத்தலும் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் வடமாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வடமாகாணத்தில் கடமையாற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர்களையும் தரவு நிரற்படுத்தும் உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-3-266)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி- இராஜவீதி ஸ்ரீ சக்திவேல் முருகன் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று மாலை 5 மணிக்கு வீதி உலா வருதலும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

---

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த வைகாசிப் பௌர்ணமி தின அலங்கார உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து எட்டுத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு தீ மிதிப்பு நிகழ்வும் தொடர்ந்து சமுத்திர நீராடலும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவருக்கு பட்டப்படிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் ஆயுர்வேத யூனானி சித்த வைத்தியம் மற்றும் ஹோமியோபதி வைத்தியத்துறைகளில் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்களை புலமைப்பரிசில் அடிப்படையில் பெறுவதற்கு இலங்கை மாணவ, மாணவியரிடம் இருந்து விண்ணப்பங்கள் கேரப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் ஆண்டிற்கு இந்த மாணவர்கள் சேர்த்து கொள்ளப்படுவார்கள். இந்திய அரசாங்கம் இவ்விதம் 10 புலமைப் பரிசில்களை மாத்திரம் வழங்க உள்ளது. திறமை, கல்வித்தகைமை அடிப்படையிலேயே செய்யப்படவுள்ளது.

இந்த மாணவர்களை தெரிவு செய்யும் பணியை இந்திய அரசாங்க அதிகாரிகள் இலங்கையின் உயர்கல்வி அமைச்சுடன் கலந்துரையாடியே மேற்கொள்வர்.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருடைய கல்விச் செலவை முழுமையாகவும் இவர்கள் இந்தியாவில் கல்வி பயிலும் போது உணவு மற்றும் ஏனைய செலவுகளுக்கு மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையையும் இந்திய அரசாங்கம் வழங்கும்.

இந்தப் புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கு தங்குமிட வசதிக்கான விசேட கொடுப்பனவு, புத்தகங்கள், காகிதாதிகளை வாங்குவதற்கென வருடாந்தம் ஒரு தொகை பணம் அன்பளிப்பாகவும் கொடுக்கப்படும். இலவச வைத்தியவசதிகளும் இந்தியாவில் செய்து கொடுக்கப்படும்.

புலமைப்பரிசில்களின் அடிப்படையில் இந்தியாவில் கல்வி பயில விரும்பும் மாணவ மாணவியர் தாங்கள் பற்றிய முழு விபரங்களையும் உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கற்கைநெறி தொடர்பான ஏனைய ஆவணங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இலக்கம் 18, வோட்ஸ் பிளேஸ், கொழும்பு 7 எனும் உயர் கல்வி அமைச்சின் தலைமைக் காரியாலயத்திற்கு 2012 மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும், மேலதிக விபரங்களை www.indianmedicine.nic.in என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். மேலும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை www.mohe.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)



ஆண்மை குறைவால் குழந்தைகள் இல்லையே என்ற கவலையா? வீரியம் அதிகரிக்க, குழந்தை பாக்கியம் பெற

ஆலோசனைக்கு அழையுங்கள் 0750 252 141 (அ/073)

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் பாவனைக்கு உட்படுத்தி தரப்படும்.

No. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 021 2228680, 077 5925088, 075 0407430 (8508)

வாழ்த்துக்கள்

முல்லைத்தீவு செலான் வங்கிக் கிளை தனது சேவையை ஆரம்பித்து ஓர் ஆண்டினை நிறைவு செய்யும் இந்நாளில் செலான் வங்கி முகாமையாளர், சகல பணியாளர்கள் அனைவருக்கும் இந்நாளில் இனிய ஓராண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்

தாய் பல்பொருள் வாணிபம்,

அலெக்ஸ் கியோமர்,

செல்வபுரம்,

முல்லைத்தீவு. (அ/072)

தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சகல பிரதேசங்களில் இருந்தும் கணனி விற்பனைக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை (Sales Rep) ஆண்/ பெண் இருபாலாரும்.

தொடர்புகளுக்கு 077 3232261, 077 6652424 (8505)

வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776181216 (8503)

உதவிப் பூசகர் தேவை

மேற்படி பதவிக்கு நல்லொழுக்கமும், திறமையுமுள்ள பிராமணர் ஒருவர் தேவை.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக் கப்படும்.ஆலய வீதியில் தங்குமிட வசதிகள் முடிவு திகதி: 28.05.2012து தரப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

தலைவர் / செயலாளர்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை, கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

தொடர்பு இல: 0779698966 0770388421 (8498)

# கடன்பட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதை வர்த்தகர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

## வணிகர் கழகம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

**வட்டிவீதம் அதிகரித்துள்ளமையால் கடன்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை வர்த்தகர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அக்கழகத்தின் உறுப்பினர்களினால் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கூட்டமொன்று கடந்த 19 ஆம் திகதி யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றிருந்தது.

இந்தக்கூட்டத்தில் தற்போதைய சூழ்நிலையில் யாழ். மாவட்ட வர்த்தர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாதிப்புக்கள் பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட வர்த்தகர்கள் எதிர்காலத்தில் இப் பிரச்சினைகள் , பாதிப்புக்களில் இருந்து விடுவிப்பதற்கான சில ஆலோசனைகள் சங்கப் பிரதிநிதிகளினால் முன்வைக்கப் பட்டிருந்தது.

அதில் அளவுக்கதிகமான பொருட்களை கொள்வனவு செய்தலை உடன் நிறுத்துவது, தற்போது வட்டி வீதம் நாட்டில் அதிகரித்திருப்பதனால் அதிகமாக கடன்பட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளல். நுகர்வோர் தேவைக்கு ஏற்ப விற்பனை செய்யக்கூடிய பொருட்களை கொள்வனவு செய்தல். வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சட்டரீதியாக அதனை செயற்படுத்தல்.

அத்தோடு விலைக்கட்டுப்பாட்டினை கடைப்பிடித்தல், காலாவதியான பொருட்கள் விற்பனை செய்வதை தவிர்த்தல், அங்கீகரிக்கப் பட்;ட நிறுவனங்களின் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் விற்பனை செய்வதை தவிர்த்துக்கொள்ளல், பொருட்களுக்கு விலைப் பட்டியல் இடுதல் போன்றவற்றைக் கடைப்பிடித்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு பல விடயங்கள் அந்தக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. எனவே வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி வர்த்தகர்கள் மேற்கூறப்பட்ட ஆலோசனைகளை பின்பற்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ஆர் ஜெயசேகரம் உட்பட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ-6)

# குடித்துவிட்டு கூத்தாடியவர்களுக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் பொது இடத்தில் மது அருந்திவிட்டு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த இரு நபர்களுக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் சம்பவ தினம் பொது இடத்தில் மது அருந்தியதாகவும் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களில் திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த இரு நபர்களுக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்றுமுன் தினம் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தர விட்டார். (அ-3-24)

# நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் மோசடி தொடர்பில் விசாரணை

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி மற்றும் கூட்டுறவு நட்டம் தொடர்பான விசாரணைகளை பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு ஆதரவாளர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என பணியாளர்களும் ஆதரவாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த காலங்களில் மாறி மாறி நிர்வாகிகள் மற்றும் உயர் அதிகாரிகள் மேற்கொண்ட ஊழல் மோசடியினால் கூட்டுறவு சங்கத்திற்கு சுமார் 5 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.




இதனால் அங்கு பணியாற்றிய ஏனைய ஊழியர்களுக்கு சம்பளக்குறைப்பு, கிளைச் சங்கங்களை மூடுதல், பணியாளர்களை பதவி நீக்குதல் என்பனவும் இடம்பெற்றன.

இதனால் பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலையின்றி இருந்தனர். இது தொடர்பாக யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் எஸ். அருந்தவநாதனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து அவரது தலைமையில் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளில் அக்காலப்பகுதியில் பணியாற்றிய நிர்வாகிகள், உயர் பணியாளர்கள் மீது தனித்தனி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 5 கோடி ரூபா மோசடி மற்றும் கூட்டுறவு நஷ்டத்தை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கலீவியங்காடு,நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# குடும்ப வன்முறையில் ஈடுபட்டவருக்கு நான்காம் திகதி வரை விளக்கமறியல்

(கரவெட்டி)

குடும்ப வன்முறையில் ஈடுபட்ட நபர் ஒருவரை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதியில் தனது குடும்பத்தாருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் வன்முறையில் ஈடுபட்டு வந்த குறித்த நபரை பருத்தித்துறை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து மன்றில் ஆஜர்படுத்துமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

குறித்த நபரை கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

# மாடு வெட்டியவர்களுக்கு 15ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

கொற்றாவத்தை சமரபாகு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய மூவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த பகுதியில் சம்பவதினம் குறித்த மூன்று நபர்களும் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாகக் கண்டு மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-24)









செலான் வங்கி, சாவகச்சேரி கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டட திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ. ஸ்ரீபிரகாஷ் மங்கள விளக்கேற்றுவதையும் செலான் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆர் நடராஜா, செலான் வங்கியின் பொது முகாமையாளர் கபில ஆரியரட்ன ஆகியோர் இணைந்து புதிய கட்டடத்தினை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் புதியவங்கிக் கட்டடத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவச்சேரி செய்தியாளர்)

# வைகாசி மாத இராசி பலன்

# 14.05.2012 - 14.06.2012



## தனுசு

**மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆம் பாதம்**

**கடன் சுமை குறையும் நேரம்!**
**நா வன்மையால் நல்ல பெயர் எடுத்துக் கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!**

## பொறுப்புகளை எதிர்பார்த்து இருப்பவருக்கு சிறப்பான நல்வாய்ப்புகள் வந்து சேரும்

நீங்கள் பாசத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். அடுத்தவர்கள் விவகாரத்தில் அனாவசியமாக தலையிட மாட்டீர்கள். எவ்வளவுதான் மாற்றுக் கருத்து உடையவர்களாக இருந்தாலும், நீங்கள் பேசியவுடன் மனம் மாறி விடுவர். அன்புக்கு அடிபணிவீர்கள். அராஜகத்தை எதிர்ப்பீர்கள். எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்துக்கொள்ள•வேண்டும் என்ற பட்டியலில் முதல் இடம்பிடிப்பவர்களும் நீங்கள் தான்.

உங்களுக்கு இந்த வைகாசி மாத கிரக நிலையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் தொழில் ஸ்தானத்தில் சனி வக்ரம் பெற்றுள்ளார். விரயஸ்தானத்தில் இராகு வீற்றிருக்கிறார். தன, சகாய ஸ்தனாதிபதியாக விளங்கும் சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களில் ஒரு சிலர் உங்களை விட்டு விலகலாம்.

இருப்பினும் குருப்பெயர்ச்சி உங்கள் இராசிக்கு 6 இல் நிகழ உள்ளத்தால் எதிர் பாராத விதத்தில் சில நன்மைகளும் வந்து சேரப்போகின்றன. தொழில், உத்தியோகம், ஜீவனம் ஆகியவற்றில் நீங்கள் செய்ய நினைத்த மாற்றங்களை இப்பொழுது செய்ய முன்வரப் போகிறீர்கள். குரு சஞ்சரிக்கும் இடம் 6 ஆம் இடமாக இருந்தாலும் பார்க்கும் இடங்கள் அனைத்தும் புனிதமடைந்து பலன்களை பலமடங்காக வழங்குமல்லவா? எனவே, பார்க்க போகும் குருவின் பார்வையை பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது யோகம் தரும்.

மாதத் தொடக்கத்தில் சூரியன், கேது சேர்க்கை உள்ளது. அதே வீட்டில்தான் குருவும் அடி எடுத்து வைக்கப் போகிறார். எனவே, அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புக்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். பொறுப்புகளை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு பொன்னான வாய்ப்புவந்து சேரப் போகிறது. குருவின் பார்வையினாலும் பலன் உண்டு. குருவின் சேர்க்கையாலும் பலன் உண்டு.

இடப புதனின் சஞ்சாரம்!

இடப இராசியில் மே 15 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 10 அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். கொடுக்கல் வாங்கல்களில் இருந்து ஏமாற்றங்கள் விலகும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு மாற்று இனத்தவர் ஒத்துழைப்புச் செய்வர். செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். தெய்வீக சம்பந்தமான காரியங்களுக்காக சிறிய தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

குருப்பெயர்ச்சி பலன்

வருடம் ஒருமுறை பெயர்ச்சியாகும் குரு இப்பொழுது உங்கள் இராசிக்கு 6 இல் சஞ்சரித்து 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். இந்த நிகழ்வு மே 17 ஆம் திகதி முதல் நிகழத் தொடங்கி உள்ளது. தொழில் வளர்ச்சி மேலோங்கும் விதத்தில் குருவின் பார்வை இருப்பதால் வியாபார இலாபம் உருவாகும். வீடு மாற்றமும், தொழில் மாற்றமும் விரும்பியபடியே நிகழும். குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். வாகனங்களில் ஏற்படும் செலவு பற்றிய கவலைகள் இனி அகலும். புதிய மறுமலர்ச்சியோடும், தன்னம்பிக்கையோடும் செயற்படத் தொடங்குவீர்கள்.

மிதுன புதனும், இடப சுக்கிரனும்

மே 31 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். இதன் விளைவாக அயல்நாட்டு பயணம் சம்பந்தமாக எடுத்த முடிவுகளில் மாற்றம் ஏற்படும். சுய இனத்தாரின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. தொழில் கூட்டாளிகளில் ஒரு சிலர் விலகிச் சென்றாலும், புதியவர்கள் வந்திணைவர். ஜூன் 9 ஆம்திகதி இடப இராசியில் சுக்கிரன் வக்ரம் பெறுவது யோகம் தரும். 6 க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது எதிர்பாராத தன இலாபம் தேடி வரலாம். கடன் சுமை குறைய வழி பிறக்கும்.

இந்த மாதம் வியாழன் தோறும் விரதம் இருந்து முல்லைப்பூமாலை அணிவித்து வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும்.

எதிர்பாராத விதத்தில் இனிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும் மாதம் இது. வாக்கு ஸ்தானதிபதி வக்ரம் பெற்றிருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து சொல்வது நல்லது. குழந்தைகளைக் கண்காணித்துக் கொள்வதன் மூலம் குழப்பங்களிலிருந்து விடுபடலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினைகள் அகலும். வீடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். குருப்பெயர்ச்சிக்குப்பின்னர் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்ராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**அனுகூலங்கள் ஆரம்பம்!**
**நிதானத்துடன் செயற்பட்டு நிலையான புகழை குவிக்கும் மகர இராசி நேயர்களே!**

## பொன்னான எதிர்காலத்தை வரவழைத்துக்கொள்ள இறைவழிபாட்டை மேற்கொள்வது அவசியம்!

பழைய சடங்கு சம்பிரதமாயங்களில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நீங்கள். இப்படித்தான் வாழவேண்டும் என்ற எண்ணத்தை இளமையிலே வளர்த்துக் கொண்டிருப்பவரும் நீங்கள்தான். நிதானத்தோடு எந்த காரியத்தையும் செய்தால்தான் நிலையான வெற்றியைப் பெறமுடியும் என்பது உங்கள் நம்பிக்கை. உற்றார், உறவினர்களைக் காட்டிலும் மாற்று இனத்தவர்களே உங்கள் மனதிற்கு பிடித்த விதத்தில் நடந்து கொள்வதாக கூறுவீர்கள்.

உங்களுக்கு இந்த வைகாசி மாதக் கிரக நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது மாதத் தொடக்கத்தில் 2 இல் சந்திரன் 5 இல் கேது அஷ்டமத்தில் இராசிநாதனின் வக்ரம், இத்தனையும் இருக்கிறது. பொதுவாக இராசி நாதன் வக்ரம் பெற்றிருக்கும் பொழுது உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதேநேரத்தில் அஷ்டமத்தில் செவ்வாயின் ஆதிக்கத்தால் பல நல்ல வாய்ப்புகள் கை நழுவிப்போகலாம். சனி வக்ர நிவர்த்தியாகும் நிலை வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

எந்த முடிவு எடுத்தாலும் இராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும்பொழுது சரியானதாக இருக்குமா என்பது சந்தேகம் தான். எனவே, பொறுமையைக் கடைப் பிடிப்பதோடு, பொன்னான எதிர்காலத்தை வரவழைத்துக்கொள்ள இறைவழிபாட்டையும் மேற்கொள்வதுதான் உகந்தது. இருப்பினும் குருப்பெயர்ச்சி இந்தமாதம் நிகழ இருப்பதால் அதன் பார்வை பலத்தால் ஓரளவு அதன் கெடுபலன்கள் குறையும்.

இலாப ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால், பொருளாதார விருத்தி எப்பொழுதும் போல சீராக இருக்கும். வேண்டிய நேரத்தில், வேண்டிய தொகை வந்து சேரும். வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடைபெறவேண்டிய முக்கிய நிகழ்ச்சிகள் செவ்வாய் அதிக்கத்தால் தாமதப்படத்தான் செய்யும். வாகனத்தில் செல்லும்போது வழியில் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. அங்காரக வழிபாடும், அனுமன் வழிபாடும் தங்கு, தடைகளை அகற்றும் விதத்தில் அமையும்.

இடப புதனின் சஞ்சாரம்

இடப இராசியில் மே 15 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உத்தியோகம் மற்றும் தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து சேரும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் கையை விட்டுபோய்விட்டதே என்ற கவலை அகல புதிய சொத்துக்களை வாங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். மாமன் வழியில் அனுகூலம் கிட்டும். கூட்டு முயற்சிகளில் ஒரு சிலவற்றில் வெற்றி காண்பீர்கள்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி

மே 17 ஆம் திகதி இடப இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை உங்கள் இராசிக்கு 9, 11 ஆகிய இடங்களில் பதிவதோடு உங்கள் இராசியையும் பார்க்கப் போகிறார். எனவே, அதன் பலன் நன்மை தரும் விதத்தில் அமைந்தாலும், உங்கள் இராசிக்கு 3, 11 ஆகிய இடங்களுக்கு அல்லவா குரு அதிபதியாகிறார். விரயாதிபதி குருவின் பார்வை பதியும் இடங்கலெல்லாம் விரயங் கள் அல்லவா உருவாகும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது தந்தை வழி மற்றும் தனது வழியில் விரயங்கள் அதிகரிக்கும். அதே நேரத்தில் இலாப ஸ்தானத்தைப் பார்ப்பதால் வரவு வந்துகொண்டே இருக்கும். எனவே, வாங்க நினைத்த பொருட்களை உடனே வாங்கி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிய வாய்ப்பும் உருவாகும்.

மிதுன புதனும், இடப சுக்கிரனும்

மே 31 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும்பொழுது கடன் சுமை கூடும். எதிரிகளின் பலம் அறிந்து கொள்வது நல்லது. இனம்புரியாத கவலைகள் மேலோங்கும். எந்த காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். அதேநேரத்தில் ஜூன் 9 ஆம் திகதி இடப இராசியில் சுக்கிரன் வக்ரம் பெறப்போவதால், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. கூட்டாளிகள் ஒத்துழைப்பு செய்ய மறுப்பர். பிள்ளைகள், அவர்கள் மனம்போல நடந்துகொண்டு ஒத்துழைக்க மறுக்கலாம். இதனால் இனம் புரியாத கவலைகள் மேலோங்கும். பஞ்சம ஸ்தானதிபதி வக்ரம் பெறும்பொழுது கொஞ்சம் யோசித்தே எந்த காரியத்திலும் இறங்க வேண்டும். அது மட்டுமில்லாமல் இறைவனை பூஜித்தும் காரியத்தில் இறங்குவதுதான் வெற்றிக்கு வித்திடும். இந்தமாதம் குருபார்வை ஒன்று மட்டும் ஓரளவு உங்களுக்கு நன்மை கொடுக்கும். மற்றக் கிரகங்களின் ஒத்துழைப்பு கிடைக்க அவற்றிற்குரிய முறையான வழி பாடுகளை மேற்கொள்வது நல்லது.

இந்த மாதம் இராசி நாதன் வக்ரம் பெறுவதால் சனீஸ்வர வழிபாட்டில் முழுமையான கவனம் செலுத்துவது நல்லது. அதுமட்டும் அல்லாமல் அஷ்டமத்து செவ்வாயின் ஆதிக்கம் இருப்பதால் அங்காரக வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது. இந்தமாதம் எதையும் யோசித்து செய்வது நல்லது. குடும்ப உறுப்பினர்களை திருப்திப்படுத்தினால்தான் குதூகலத்தை வரவழைத்துக்கொள்ள முடியும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. ஆகார கட்டுப்பாடும் உடலை சீராக்கும், சகோதர பகையை சமரசம் ஆக்கிக் கொள்ளுங்கள். நீண்டதூரப் பயணங்களை மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை அமையும். மாதத்தின் மையப்பகுதியில் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம். சுக்கிரனின் வக்ர இயக்கத்தால் பழைய நகைகளை கொடுத்துவிட்டு புதிய நகைகளை வாங்கும் எண்ணம் மேலோங்கும். ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஓசோன் படலமும் அதனை பாதுகாத்தலின் முக்கியத்துவமும்

❖ மனிதனில் நோய் தடுப்பு உடல் சக்தி குறைதல்

❖ UV கதிர்களின் சக்தி அதிகமாவதால் அவை நீரினுள் மேலும் ஆழப் பயணம் செய்யும். இதன்மூலம் மீனினம், ஊர்வன ஆகியவற்றின் முட்டைகள் அழிவுறும். அத்துடன் மீனின உணவுகளான Plankton அழிவுறும்.



❖ UV கதிர்கள் விந்தணுக்களின் முரண்பாட்டிற்கு காரணியாக அமையும். அவை இறுதியில் புற்றுநோயாக மாறக்கூடும்.


❖ வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிப்பதனால் உலக நாடுகளின் காலநிலை தன்மையில் மாற்றம் ஏற்படும். இதன்மூலம் மழை பெய்யாமல் போகும், வரட்சியேற்படும்.


❖ ஓசோன் பூமிக்கு வரும் UV கதிர்கள் பூமிக்கு கிட்டிய ஒட்சிசன் வாயுவை ஓசோன் ஆக மாற்றும். மேலும் ஓசோன் வாகனங்களின் மூலம் வெளியேறும் எரிக்கப்படாத ஐதரோகாபனுடன் ஒன்றிணைந்து இரசாயன புகைகளை உருவாக்கும். இவை சுவாசப்பையுடன் தொடர்புடைய நோய்களை உருவாக்கும்.

இங்ஙனமாக ஒன்றோடொன்று தொடர்புடைய சுற்றாடல் பிரச்சினைகள் அதிகளவு ஓசோன் படலத்தின் தாக்கத்தினால் (அழிவினால்) ஏற்படும். இதன் இறுதி பிரதிபலன் பூமியில் வாழும் சகல உயிரினங்களினதும் அழிவாகும்.

**ஓசோன் படலத்தினை பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

புள்ளிவிபரங்கள் அடிப்படையில் பார்க்கும்போது வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் அதிகளவானவை ஓசோன் படலத்தினை மாசுபடுத்தும் வாயுக்களை வெளியிடுவது புலனாகிறது. இருப்பினும் ஓசோன் படலம் மாசு அடைதலை தவிர்த்தல் தொடர்பாக உலகமய புரிந்துணர்விற்கு உலக நாடுகள் ஒன்றிணைதல் 1985ஆம் ஆண்டு ஆரம்பமானது. இதன் மூலம் ஓசோன் படலத்தினை பாதுகாத்தலுக்காக உலக ஒன்றிணைப்புகளை ஏற்படுத்துதல் தொடர்பாக சட்ட தொழில்நுட்ப முறைகள் தயாராகின. இவ் விடயங்களுக்கு மேல் 1987 ஆம் ஆண்டு மொன்றியல் கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் ஓசோன் படலத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல், பாவித்தலை படிப்படியாக குறைத்தல் இறுதியில் முழுமையாக தடை செய்தல் தொடர்பாக வழிகோலும் செயலமர்வினை தோற்றுவித்தார்கள். 1989 ஆம் ஆண்டில் இலங்கை மேற்படி வியன்னா கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு பங்காளிகளாக மாறியது. எனவே, நம் நாட்டிலும் ஓசோன் வாயுவிற்கு பங்கம் ஏற்படுத்தும் பொருட்களை பாவனையில் இருந்து நீக்கிவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






✷ குளிரூட்டிகளில் CFC க்கு பதிலாக HFC (Hydoofluro carbon) பாவித்தல்.

✷ கொவோன் வகை தயாரிப்பிற்கு CFC க்கு பதிலாக HFC பாவித்தல்.

✷ மீதியில் புரோமைட்டுக்கு பதிலாக ஓசோன் வாயுவிற்கு தீங்கு ஏற்படுத்தாத பிற பதார்த்தங்களைப் பயன்படுத்தல்.

✷ வாகனங்களுக்கு (ஓசோன் பாதிக்காத) மாற்று எரிபொருட்களை பாவித்தல்.

✷ தீயணைக்கும் உபகரணங்களுக்கு மாற்று பொருட்களை பாவித்தல்.

✷ வேற்று நாடுகளில் இருந்து CFC வெளியேற்றும் உள்ளடக்கப் பொருட்களை எம் நாட்டிற்கு இறக்குமதி செய்வதை தடுப்பதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இவ்வாறான பல நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் தொடர்ந்து ஓசோன் படை பாதிப்படைவதை இயன்றளவு குறைத்து கொள்ள முடியும்.

நாளைய தினம் வரை காத்திராமல் இன்றே நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(முற்றும்)

**து.பிரதீபன்**
இரசாயனவியல் ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
(பதிப்பாசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 64

**செயற்கைக் குருதி தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பக்ரீரியா எது?**

விடைகளை 04.06.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**ஜே. பிரபாகர்**
(செயலாளர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
இரசாயனவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 63 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி** வெல்லப்படவில்லை

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 64**

சரியான விடை:-..............................................
முழுப்பெயர்:-..............................................
முகவரி:-..............................................
தொ.பே. இல:..............................................
கையொப்பம்:..............................................

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 139

### பிரான்ஸின் தெற்கே நேசநாட்டவரின் படையிறக்கம் (1944-ஆகஷ்ட் 15- செப்ரம்பர்3)

ஆகஷ்ட் நடுவில் நேசநாட்டுத் துருப்புகள் பிரான்சின் தெற்கே இறங்கின. 90 கி.மீ. வரை நீளமும் 25 கி.மீ. வரை அகலமும் உடைய தாக்குமுனையை பிரான்ஸின் தென்கரையில் கைப்பற்றி, துலோன் மற்றும் மர்சேல் துறைமுகங்களைக் கைப்பற்றி மேற்கொண்டுலியோனை நோக்கி முன்னேறுவது என்பதுதான் தெற்கு பிரான்ஸ் நடவடிக்கையின் திட்டமாக இருந்தது. இந்நடவடிக்கையை நிறைவேற்றுவதற்காக 60-வது அமெரிக்க கோர்பசும் 1-வது, 2-வது பிரெஞ்சு கோர்பஸ்களும் அடங்கிய 7-வது அமெரிக்கப் படையும் ரெக்பி எனும் பிரிட்டிஷ்- அமெரிக்க வான் இறக்குப்படை சண்டைப் பிரிவும் ஒதுக்கப்பட்டன. படையிறக்கத்திற்காக 817 போர்க் கப்பல்கள், 63 போக்குவரத்துக் கப்பல்கள் சுமார் 1,370 இறக்குப்படை கப்பல்கள் மற்றும் படையிறக்க சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. கடலிலிருந்து 5 போர்க் கப்பல்கள், 9 பாதுகாப்பு விமானந்தாங்கிக் கப்பல்கள், 24 குரூசர்கள், வான் எதிர்ப்பு பாதுகாப்பின் குரூசர்கள் மற்றும் பிற வகையான கப்பல்கள் வைஸ் அட்மிரல் ஹியூயிட் தலைமையின் கீழிருந்தன. விண்ணிலிருந்து 5000 விமானங்கள் அடங்கிய விமானப்படை, படையிறக்கத்திற்காக வகைசெய்தது.

19-வது ஜேர்மனியப்படை நேசநாட்டவரை எதிர்த்து நின்றது. இது போதுமான அளவு ஆள் பலத்தைப் பெற்றிருக்கவில்லை. இதற்கு ஆயுத பலம் போதுமானதாக இருக்கவில்லை. அதன் போர்வன்மையும் குறைவானதாகவே இருந்தது. கான் நகருக்கு மேற்கே நேசநாட்டவரின் படையிறக்கத்தின் 80-வது கி.மீ. இடத்தில் 242-வது காலாட்படை மற்றும் 148-வது சேம இருப்பு ஜேர்மனிய டிவிசன்களைச் சேர்ந்த 5 பட்டாலியன்கள் மட்டுமே தற்காப்பில் இருந்தன.




அமெரிக்க, பிரான்ஸ் படைவீரர்கள் தமது மதிப்பிற்குரிய ஆயுதங்களை ஒப்பிடட்டுப் பார்க்கின்றனர்

அமெரிக்க-பிரெஞ்சுத் துருப்புகள் வட ஆப்பிரிக்கா, இத்தாலி, கோர்ஸிக்காவில் நீண்டகால, பரிபூரண பயிற்சியைப் பெற்றிருந்தன. படையிறக்கத்தைத் திடீரென நிறைவேற்றும் பொருட்டு நேசநாட்டுப் படைத் தலைமை எதிரியைக் குழப்புவதற்காக உருமாற்ற நடவடிக்கையை மேற்கொண்டது.

ஆகஷ்ட் 14 ஆம்திகதி மாலையில், மர்சேலுக்கும் துலேனுக்கும் இடையே எவ்வித நடவடிக்கையையும் திட்டமிடப்படாத இடத்தில் இரு கப்பல் தொகுதிகள் கடல் இறக்குப்படையை இறக்குவதைப்போல் செய்து காட்டின.

ஆகஷ்ட் 15 காலையில் நேசநாட்டினர் பிரான்சின் தென் கரையில் 9732 பேரடங்கிய வான் இறக்குப் படைப்பிரிவை இறக்கினர். 532 விமானங்களும் 465 கிளைடர் விமானங்களும் இப்படையிறக்கத்தில் பங்கேற்றன. பாசிஸ்டுகளில் விசேட எதிர்ப்பு எதுவும் இல்லாததால் இறக்குப்படையினர் ஒரு சில குடியிருப்பு மையங்களைப் பிடித்தனர். கடல் படையிறக்கத்திற்குமுன் விமானப்படை, பீரங்கிப் படையின் பலத்த பூர்வாங்கத்தாக்குதல் இருந்தது. 1300 விமானங்கள் அடங்கிய நேசநாட்டு விமானப்படை படையிறக்க இடத்தில் 12,500 டன் குண்டுகளை வீசியது. நாள் முடிவில் நேச நாட்டினர் 3 தாக்குமுனைகளைக் கைப்பற்றினர். ஆகஷ்ட் 19 வாக்கில் இவை மூன்றும் 90 கி.மீ. நீளமும் 60கி.மீ. அகலமும் உடைய ஒரு பொது தாக்குமுனையாக ஒன்றிணைக் கப்பட்டன. இதில் நேசநாட்டவரின் கணிசமான சக்திகள்-1,60,000 வரையிலான நபர்கள், 2500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 600 டாங்கிகள், சுமார் 21,500 கார்டுகள்- குவிக்கப் பட்டிருந்தன.



நார்மாண்டியில் பிரான்ஸ்,பிரிட்டிஷ் துருப்புகள் தண்டவாளத்தில் ஜீப் வண்டியை ஓட்டுகிறார்கள்

பாசிஸ்டுகளின் நிலை பெரிதும் மோசமாகியது. ஒருபுறம் பிரான்சின் தெற்கே பெரும் இறக்குப்படை இறக்கப்பட்டிருந்தது. மறுபுறம் இந்நேரத்தில், வடகிழக்கு பிரான்சில் இயங்கிய பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகள் ஸேனா ஆற்றின் எல்லையை அடைந்தன. எதிர்ப்பு இயக்கத்தின் அளவு மிகப் பரவலானதாக இருந்தது. நேசநாட்டுத் துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் மர்சேல், துலோன், மற்ற சில நகரங்களில் பட்டது. ஆகஸ்ட் 22 இல் நேசநாட்டினர் கிரேனோபில்லை விடுவித்தனர், ஒருவாரம் கழித்து கிளர்ந்தெழுந்த குடிமக்களின் உதவியோடு துலோனும் மர்சேலும் விடுவிக்கப்பட்டன. பிரெஞ்சு தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட லியோனில் செப்ரம்பர் 2 ஆம் திகதி நேச நாட்டினர் காலடி எடுத்து வைத்தனர். எதிரியின் எதிர்ப்பைச் சந்திக்காத அமெரிக்க-பிரெஞ்சுத் துருப்புகள் மேற்கொண்டு வடக்கு நோக்கி முன்னேறி செப்ரம்பர் 10 ஆம் திகதி டிஷோனுக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தில் 3-வது அமெரிக்கப்படையின் முன்னணி அணிகளுடன் இணைந்தன. இதன் மூலம் பாடெகாலே கரையிலுருந்து மத்திய தரைக்கடல் வரையில் நேசநாட்டுத் துருப்புகளின் ஒரே தொடர்ச்சியான போர்முனை உருவாக்கப்பட்டது. நேசநாட்டவரின் தீர்மானமற்ற நடவடிக்கைகளும் இவர்களின் மெதுவான முன்னேற்றமும்தான் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் தோல்வியைத் தவிர்க்க உதவின. "19-வது படையின் பிரதான சக்திகள் பின்வாங்க, பிரதான போர்முனையில் எதிரி ஆபத்தாயிருந்ததைவிட பின்னணியிலிருந்து பிரெஞ்சு கெரில்லாப்படை வீரர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அதிக ஆபத்தாயிருந்தன" என்று நாட்குறிப்பில் குறிப்பிடப் பட்டிருந்தது.



படை வீரர்[illegible]ளின் [illegible]யாதையை ஏற்றுக்கொள்ளும் [illegible]டுதலைப்படை மார்ஷல்கள்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு



பிரான்ஸ் படையின் போர்விமானங்கள்

குறைந்த அளவு பாதுகாப்புச் சக்திகளை விட்டுவிட்டு தனது 19-வது படையை ஜேர்மனியின் மேற்கு எல்லைகளுக்குப் பின்னுக்கு இட்டுச் செல்லுமாறு பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை நிர்ப்பந்திக்கப்

(தொடரும்)

# குற்றச்சாட்டுகள் இல்லாது தடுத்து வைக்கப்பட்டுள்ள

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

## மங்கள சமரவீர எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களாக அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டு தற்போது உண்ணா நிலைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள 234 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இதுவரை காலமும் எவ்விதக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் நாங்கள் கோருகின்றோம்,

குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் தற்போது புதிதாக குற்றம் சுமத்த முடியாது.

அரசியலமைப்பின் 34 ஆவது அதிகாரத்தின் கீழ் சரத் பொன்சேகாவிற்கு எஞ்சியுள்ள தண்டனைக் கரலம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைகளைக் பாதுகாப்பதாக சர்வதேசத்திற்கு பிரசாரம் செய்வது மாத்திரம் போதுமானதாக இருக்காது. நாட்டு மக்களுக்கு ஜனநாயக சுதந்திரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சரத்பொன்சேகா ஓர் அரசியல் கைதி என அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே சரத் பொன்சேகாவிற்கு மறுக்கப்பட்ட சகல உரிமைகளும் மீள அளிக்கப்பட வேண்டியது அவசியமானது.

கடந்த காலங்களில் சரத் பொன்சேகாவுடன் தொடர்புகளைப்பேணிய காரணத்திற்காக பழிவாங்கப்பட்ட பாதுகாப்புத்தரப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும்.

ஜனாதிபதி பொது மன்னிப்பு முழுமையாக வழங்கப்பட்டு சரத் பொன்சேகாவின் சகல சிவில் உரிமைகளையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (அ-2)

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் இணக்கப்பாடுகளுக்கு இடமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு தொடர்பில் கூட்டமைப்புடன் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் மிகவும் முக்கியமான விடயங்களில் ஒன்றாக தேசிய பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் கருதப்பட வேண்டும் எனவும் அந்த விவகாரத்தில் இணக்கப்பாடுகளுக்கு இடமில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றிக்கொள்ளுமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 630 இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. இந்தப் பின்னணியில் அமெரிக்கா தேசியப் பாதுகாப்பு தொடர்பில் இணப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. வடக்கின் அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் நிலைநிறுத்தப்பட்ட படை வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பொன்சேகா விடுதலைக்காக

# பட்டாசுகொளுத்திய இராணுவ முகாம்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதால் மகிழ்ச்சியடைந்து பட்டாசுகளை கொளுத்திய சில இராணுவ முகாம்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடத்தி அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரிகள் குறித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த 22 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா கடந்த 21 ஆம் திகதி விடுதலை செய்யப்படவிருந்ததை முன்னிட்டு சில இராணுவ முகாம்களில் தொடர்ந்தும் பட்டாசுகள் கொளுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் கஜபா படைப்பிரிவின் நகர காவலரண், காங்கேசன்துறை, ரத்மலானை கலால் படையணி தலைமையகம், பேசாலை- காரைநகர் துறைமுக காவலரண், கல்லடி இராணுவ தலைமையகம், வவுனியா 22 ஆவது படைப்பிரிவு மாந்தோட்டம் இராணுவ முகாம் போன்றவற்றில் இவ்வாறு பட்டாசுகள் கொளுத்தப்பட்டன.

இந்நிலையில் பாதுகாப்புச் செயலளாரின் உத்தரவை அடுத்து குறித்த முகாம்களுக்கு சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அதிகாரிகளிடமும் சாதாரண சிப்பாய்களிடம் வாக்குமூலங்களை பெற்று வருகின்றனர். (அ-2)

# இந்தோ.வில் இலங்கை அகதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் சுமாத்திராவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள் தம்மை அவுஸ்திரேலியாவில் குடியமர்த்துமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

அகதிகள் பலர் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு அமைந்திருக்கும் மெடன் நகரில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

தாம் இரண்டு வருடங்களாக இந்தோனேசியாவில் வசித்து வருவதாக தெரிவித்துள்ள இவர்கள் இந்தோனேசிய மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் தமக்கு உரிய குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மலேசியாவில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் வழியில் இந்தோனேசிய கடற்படையினரால் இலங்கையர்கள் உட்பட 250 பேர் வழிமறிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இந்நிலையில் உரிய பதில்கள் வழங்கப்படாவிட்டால் தாம் மீண்டும் போராட்டம் நடத்தப்போவதாக இலங்கை அகதிகள் எச்சரித்துள்ளனர். (அ-2)

# கருவுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தடை

(கொழும்பு)

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவுக்கு எதிராக அக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு தடை விதிப்பதற்கு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சட்டத்தரணி சிறிநாத் பெரேரா தலைமையிலான விசாரணைக்குழுவின் அடிப்படையில் தமக்கு எதிராக ஐ.தே.க. ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு தடை விதிக்குமாறு கோரி கரு ஜயசூரிய மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இக்கோரிக்கையை நீதவான் சம்பா ஜனாகி ராஜரட்ன நிராகரித்தார். (அ-2)

# ஜனாதிபதி தேர்தலில் சரத்தை ஐ.தே.க. ஆதரித்தமை பயங்கரமானது

## அமெரிக்கா தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிப்பது பயங்கரமான விளையாட்டாகும் என்று அமெரிக்க தூதரகம் அந்தக் காலகட்டத்தில் இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்திருந்தது. விக்கிலீக்ஸ் இந்தத் தகவலை கசிய விட்டுள்ளது.

சரத்பொன்சேகாவின் எவ்வாறான பொருளாதாரக் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது என்பது தெளிவாக இல்லை என்று அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டிருந்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதியன்று அமெரிக்கத்தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பிய தகவலில் சரத் பொன்சேகா ஒரு இராணுவ வீரர். அத்துடன் அவருக்கு பொருளாதாரம் பற்றி ஓரளவு அறிவே உள்ளது. அதனை அவரே ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதித்தேர்தலில் பொருளாதாரக் கொள்கையே முன்னிலை பெறுகின்றது.

எனினும் மஹிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் தமது திறமைகளையும் மற்றவரின் பழைய தவறுகளையும் மாத்திரம் சுட்டிக்காட்டி பிரசாரத்தில் ஈடுபடுவதாக அமெரிக்கத்தூதுவர் இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார். (அ-2)

# வடமாகாண தமிழ்மொழித் தினவிழா

(பூந்தோட்டம்)

வடமாகாண தமிழ்மொழித்தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன், வவுனியா பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ்.எம்.முகைதீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின்போது கவின் தமிழ் மலர் வெளியீடும் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (அ-3-266)

# மக்களாதரவு அதிகமுள்ள ஜனாதிபதிகளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது இடம்

## கருத்துக் கணிப்பில் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் வேலைத்திட்டங்களுக்கு மக் களில் 91 சதவீதமானோர் இணங்கி யுள்ளதா அமெரிக்க ஆய்வு நிறு வனம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது.

அமெரிக்காவின் மக்கள் கரு த்து கணிப்பை பெறும் கோல் அப் நிறுவனம் இந்த ஆய்வுகளை மேற் கொண்டுள்ளது.

இதேவேளை, 6 சதவீதமான மக்கள் ஜனாதிபதியின் செயற்றிட் டங்கள் குறித்து அதிருப்தி தெரிவிப் பதாக குறிப்பிடப்பட்டுள் ளது. மேலும் 3 சதவீதமான மக்கள் செயற்றி ட்டங்கள் குறித்து எந்தவித கருத் துக்களையும் வெளியிடவில்லை.

21 ஆசிய நாடுகளை அடிப்ப டையாக கொண்டு மேற்கொள்ளப் பட்ட குறித்த ஆய்வில் மக்கள் ஆத ரவு அதிகமுள்ள ஜனாதிபதிகளில் இலங்கை ஜனாதிபதி 3 வது இட த்தை பெற்றுள்ளார்.

இதன்போது முதலாவது இட த்தை லாவோஸ் நாட்டின் தலைவர் ச்சொம்மாலி செயிக்நசன் பெற்று ள்ளதுடன் இரண்டாவது இடத்தை காம்போடியாவின் ஜனாதிபதி ஹன் சென்னும் பெற்றுக்கொண்டுள் ளார்.

(அ-2)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்!

## ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களை விடுவிக்க நடவடிக்கை எடு க்க வேண்டும் என ஐரோப்பிய ஒன் றிய நாடாளுமன்றத் தலைவர் ஜீன் லெம்பர்ட் கோரியுள்ளார். ஐ.ஏ. என்.எஸ் இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்க ப்பட்டுள்ள பல தமிழ் கைதிகள் இன்னும் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான அரசியல் கைதி கள் தற்போது விடுதலை கோரி உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள் ளமையையும் அவர் சுட்டிக் காட் டியுள்ளதாக ஐ.ஏ.என்.எஸ் தனது செய்திக் குறிப்பில் தெரிவித் துள் ளது.

(அ-2)

# வவுனியாவில் நில அபகரிப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தடை விதிப்பு

இலங்கையின் வட கிழக்குப் பகு திகளில் பொதுமக்களின் காணிகள் கையகப்படுத்துவதைத் தடுத்து நிறு த்த வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம்வவுனியாவில்நடைபெறவி ருந்த ஆர்ப்பாட்டப் பேரணியொ ன்று நீதிமன்ற உத்தரவின் கீழ் தடை செய் யப்பட்டதாக ஜே.வி.பியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரா கிய சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஜே.வி.பியின் சகோதரத்துவத்தின் மக்கள் அரண் என்ற அமைப்பு ஏற் பாடு செய்திருந்தது.

தடை உத்தரவையடுத்து ஆர்ப் பாட்டப் பேரணியைத் தாங்கள் ஒத்தி வைத்துள்ளதாக செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சந்திரசேகரனும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப் பினருமாகிய சுனில் ஹந்துன் நெத் தியும் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக பொலிஸாரே நீதி மன்றத் தடையுத்தரவைப் பெற்றி ருந்ததாகவும் இதன்மூலம் அரசா ங்கம் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளதாகவும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினராகிய சந்திரசே கரன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகின்றன. ஆனால், வடக் கில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வில்லை. நிர்வாகச் செயற்பாடுக ளில் இராணுவத்தின் தலையீடு உள் ளது என்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக அவற் றைப் பெரிதுப்படுத்திச் செல்லுகி ன்ற நடவடிக்கைகளையே அரசா ங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் சந்திரசேகரன் கூறியுள்ளார். (அ-2)

# சி.சி.டி.வி. கமரா முறை அறிமுகப்படுத்தப்படும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சி.சி.டி.வி.கமரா கட்டமைப்பின் ஊடாக வீதியில் பயணிக்கும் நபர் களின் முகங்களை இணங்கண்டு கொள்ளும் முறையொன்றை அறி முகப்படுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குவழங்கியசெவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறி ப்பிட்டார். சில தினங்களுக்கு முன் னர் ஆரம்பிக்கப்பட்ட சி.சி.டி.வி. நடமாடும் வாகனங்களின் துணை யுடன் இங்காணப்பட்ட குற்றச்செயல் களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதனடிப்படையிலேயே குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் களை இனங்காணுவதற்கு இந்த செயற்பாட்டினை நடைமுறைப்ப டுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# 2012.05 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1659-ரிச்சார்ட் குரெம்வெல் இங்கிலாந்தின் ஆட்சிக் காவலர் பெருமகன் (Lord Protector) பதவியைத் துறந்தார். பொதுநலவாய இங்கிலாந்தின் இரண்டாவது குறுகியகால அரசு ஆரம்பமானது.

★ 1810- ஆர்ஜென்டீனாவில் இடம்பெற்ற புரட்சியின் போது ஆயுதம் தரித்த பியூனஸ் அயரஸ் மக்கள் ஸ்பெயின் ஆளுநரை வெளியேற்றினார்கள்.

★ 1812-இங்கிலாந்தில் ஜரோ என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க வெடிவிபத்தில் 96 பேர் உயிரிழந்தனர்.

★ 1837- கியூபெக்கில் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராக நாட்டுப்பற்றாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

★ 1865- அலபாமாவில் மொபைல் என்ற இடத்தில் தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிப்பில் 300 பேர் உயிரிழந்தனர்.

★ 1895-போர்மோசா குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1953- நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியைச் சோதித்தது.

★ 1955- ஐக்கிய அமெரிக்காவில் கன்சாஸ் மாநிலத்தில் உடால் என்ற சிறு நகரை இரவுநேர சூறாவளி தாக்கியதில் 80 பேர் உயிரிழந்தனர்.

★ 1961-அப்பல்லோ திட்டம்: பத்தாண்டுகளில் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்.

★ 1963-அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க ஒன்றியம் உருவானது.

★ 1966- எக்ஸ்புளோரர் 32 விண்வெளிக்கு ஏவப்பட்டது.

★ 1977-ஸ்டார் வோர்ஸ் திரைப்படம் வெளிவந்தது.

★ 1979- ஐக்கிய அமெரிக்காவின் ட்சி-10 விமானம் ஒன்று சிக்காகோவில் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 271 பேரும் தரையில் இருவரும் உயிரிழந்தனர்.

★ 1982-போக்லாந்து போரில் கவேண்ட்ரி என்ற ஆங்கில கப்பல் மூழ்கியது.

★ 1985-வங்காளதேசத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 10 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1997-சியேரா லியோனியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி அகமது கப்பா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 2000-லெபனானில் 22 ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த இஸ்ரேல் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

★ 2001-அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹன்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.

★ 2002- சீன விமானம் ஒன்று தாய்வானில் நடுவானில் வெடித்துச் சிதறியதில் 225 பேர் உயிரிழந்தனர்.

★ 2002- மொசாம்பிக்கில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 197 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1458-மஹ்மூத் பேகடா,குஜராத் சுல்தான் (இ.1511)

★ 1865- பீட்டர் சீமன், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (இ.1943)

★ 1866-மு.சி.பூரணலிங்கம்பிள்ளை, தமிழறிஞர் (இ.1947)

★ 1918-நா.முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (இ.1995)

★ 1933- அநு. வை. நாகராஜன், ஈழத்து எழுத்தாளர்.

★ 1954-முரளி, மலையாள நடிகர் (இ.2009)

### இறப்புக்கள்

★ 1988- ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1906)

★ 2005-சுனில் தத், இந்திய நடிகர், அரசியல்வாதி (பி.1929)

### சிறப்பு நாட்கள்

★ ஆர்ஜென்டீனா- மே புரட்சி தினம்

★ ஆபிரிக்க சுதந்திரதினம்-சாட், லைபீரியா, மாலி, மவ்ரித்தானியா, நமீபியா, சாம்பியா, சிம்பாவே

★ லெபனான்- சுதந்திரதினம் (2000)



★ 1878-தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பிறந்த தினம். (இ.1953)

# சரத்பொன்சேகா 27 மாதகால சிறைவாழ்விலிருந்து மீண்டார்!

உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுவை விலக்கி, வெலிக்கடைக்கு கொண்டு செல லப்பட்டு, பின்னர் ஒரு வழியாக விடுதலையானார் சரத்பொன் சேகா.

அவர் வெளிநாடு செல்ல முடி யாது உள்நாட்டில் இருந்தபடியே வழக்குகளை சந்திக்க வேண்டும்.

இதேவேளை, சரத்பொன் சேகாவை வைத்து எப்படி அர சியல் நகர்வுகளை தீவிரப்படுத் தலாம் என்று அவர் வெளி யேவர முன்னரே எதிர்க் கட்சிகள் திட்டம் போடாத் தொடங்கி விட்டன.

சரத்பொன்சேகா வும் அடி பட்ட பாம்பாகவே வெளியே வந்துள்ளதால், விரை வில் அரசி யல் களம் சூடுபறக்கக் கூடும்.

இவையெல்லாம் ஒரு புறத்தில் இருக்க, அரசாங்கம் எதற்காக அவசரப்பட்டு சரத்பொன் சேகாவை விடுதலை செய்தது என்ற கேள்வி பலருக்கும் உள் ளது.

**அதுவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே, இந்த விவகாரத்தில் அதீத அக்கறை காட்டியிருந்தார். பொன்சேகாவை விடுவிக்கக் கோரி அலரி மாளிகைக்குச் செல்ல முடியாது என்று மறுத்த அனோமாவைச் சந்திப்பதற்காக, ட்ரான் அலஸின் வீடு தேடிப் போயிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இது ஒன்றும் சாதாரண விடயம் அல்ல.**

சரத்பொன்சேகா விடயத்தில் அரசாங்கம் திடீரெனத் தனது போக்கை மாற்றிக் கொண்டு அவரை விடுப்பதில் அவசரம் காட்டியது பலரையும் ஆச்சரியப் பட வைத்துள்ளது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது போலத்தான் இதுவும். இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அதில் ஒன்று வெளிநாட்டு அழுத்தங்கள்.

குறிப்பாக அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பயந்தே அரசாங்கம் அவரை விடுதலை செய்தது என்ற கருத்து வலுவாக உள்ளது.

ஆனால், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அழுத்தங்களுக்குப் பயந்து சரத்பொன்சேகாவை விடுவிக்கவில்லை என்று ஊடகப்

கே.சஞ்சயன்

பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் அழுத்தங்கள் ஒன்றும் அரசாங்கத்துக்குப் புதியது அல்ல. சரத்பொன்சேகா கைது செய்யப்பட்ட நாள் தொடக்கம் அமெரிக்காவின் அழுத்தங்கள் இருந்தே வந்துள் ளன. எனவே திடீரென அமெரிக் காவின் அழுத்தங்களுக்கு அரசாங் கம் பயந்தது என்று கூறமுடியாது. வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் அமெரிக்கப் பயணத்தில் உள்ள



நெருக்கடிகளை குறைப்பதற்கு, இவரை விடுவிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கலாம்.

ஆனால், முன்கூட்டியே திட்ட மிடப்பட்டதும், உயர்மட்டத்தில் நடப்பதுமான சந்திப்புகளில்






இதுபோன்ற சின்னச்சின்ன விவ காரங்களின் மூலம் மையப்பிரச் சினையை ஓரம்கட்ட முடியாது என்பது அரசாங்கத்திற்கு தெரியா



மல் இருக்காது.

அதேவேளை உள்நாட்டு அரசி யல் நெருக்கடிகள் என்று கூறும் அளவுக்கும் பெரிதாக ஒன்றும் இல்லை. அப்படியானால் எதற்காக அரசாங்கம் அவசரப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

இந்தச் சூழலில்தான் எதிர்க் கட்சிகளைப் பலவீனப்படுத்து வதற்காகவே சரத்பொன்சேகா விடுவிக்கப்பட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அரசாங்கத்தின் செல்வாக்கு குறைந்து வருகிறது. இதை அரசாங் கத்தில் உள்ள அமைச்சரான ரஃப் ஹக்கீமே கூறியுள்ளார். பொருளா தார வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் அரசின் மீது இருந்த மக்களின் நம்பிக்கை உடைந்து போகத் தொடங்கி யுள்ளது.

இதற்குள் நல்லணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடை முறைப் படுத்தும் விவகாரம் வேறு, சிக்கலாக இருக்கிறது. அரசியல் பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வு என்று பல பிரச்சினைகள் தொந்தரவு கொடுக்கின்றன.

இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மக்களின் ஆணையைப் பெற அரசாங்கம் முனையலாம் என்ற வலுவான சந்தேகம் எழுந்துள்ளது. செல் வாக்கு மோசமாக வீழ்ச்சியடை வதற்கு முன்னர் தேர்தலை நடத்தக் கூடும். அதன் ஒரு கட்ட மாகவே, வரும் செப்ரெம்பரில் மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தி ஆழம் பார்க்கவும் திட்டமிட்டுள் ளது.

அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த முனையும் அரசாங்கத் துக்கு, அதற்குள் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து விடுமோ என்ற பயமும் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செல்வாக்கு வீழ்ச்சி, ஆளும் கூட்டணிக் கட்சிகளை எதிரணிக்குள் கொண்டு போய்விடவும் கூடும். யாழ்ப் பாணத்தில் மேதினத்தன்று சம்பந் தனும் ரணிலும் ஒன்றிணைந்ததை அரசாங்கம் விரும்பவில்லை. ,

இப்படியான சூழலில் சரத் பொசேகாவை உள்ளே அடைத்து வைத்திருப்பதைவிட வெளியே விடுவதுதான் இராஜதந்திரம். ஏனென்றால், அவரது விடுதலை ஏற்கனவே ஐக்கியதேசியக் கட் சிக்குள் இருக்கும் தலைமைத்துப் பிரச்சினையை மேலும் தீவிரமாக் கும்.

சரத்பொன்சேகாவுக்கும் ஜே.வி.பி. இற்கும் இடையில் இப்போது உறவுகள் இல்லை. எனவே ஜனநாயக தேசிய கூட்ட ணியை வைத்து அவர் அரசியல் நடத்தமாட்டார்.

அவரை ஐக்கியதேசியக் கட்சிக் குள் கொண்டுவர ஏற்கனவே பேச் சுக்கள் நடத்தப்பட்டன. மீண்டும் அதற்கான முயற்சிகள் எடுக்கப் படலாம். குறிப்பாக, ரணிலுக்கு எதி ரா்ன ஐக்கியதேசியக் கட்சியினர் பொன்சேகாவை முன்னிலைப் படுத் தலாம். அது எதிரணிக்குள் குழப்பத் தை உருவாக்கும்.

அதுபோன்ற சூழலில் ஏற் படுவது அரசதரப்புக்கு வாய்ப்பை ஏற்படுத்தும். இதுவே பொன்சேகா விடு தலையின் சூட்சுமம் என்கின் றனர் சில ஆய்வாளர்கள்.

அரசாங்கத்தின் அவசரத்தைப் பார்க் கும்போது, இந்த விடுதலை யின் ஊடாக எதையோ பெற முனைகிறது என்பதை உணர முடிகிறது.

வெளியே வந்துள்ள சரத் பொன்சேகா அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தப் போகிறாரா அல்லது எதிர்க்கட்சிகளை வலு விழக்கச் செய்யப் போகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள சிறிது காலம் தேவைப்படும்.

(முற்றும்)

# 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## முதியோர் அமைப்புக்கள் பதிவுசெய்வது அவசியம்

(கொழும்பு)

**இலங்கையில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு எதிர்வரும் ஜுன் மாதம் முதல் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

முதியோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 11 வீதமாக காணப்படுகின்றது. கல்வியறிவும் சுகாதார வசதிகளும் அதிகரித்தமையே நாட்டில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாகும்.

இலங்கையின் சனத்தொகையில் 2 இலட்சத்து 19 ஆயிரத்து 193 பேர் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களாக உள்ளனர். எமது நாட்டை பொறுத்த வரையில் ஆண்களின் ஆயுட்காலம் 73 வருடங்களாகவும் பெண்களின் ஆயுட்காலம் 76 வருடங்களாகவும் காணப்படுகின்றன.

இலங்கையின் கல்வியறிவு 96 வீதமாகவும் சுகாதார வசதிகள் 98 வீதமாகவும் அதிகரித்ததன் காரணமாகவே முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தொற்று நோய்களால் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

எனவேதான் நாம் முதியோர் பராமரிப்பு, முதியோரின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இதுவரையில் முதியோருக்கு அரசினால் உதவித் தொகையாக 300 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இவர்களின் நலனை கருத்திற் கொண்டு எதிர்வரும் ஜுன் மாதம் முதல் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.


அதேவேளை, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல பெயர்களில் முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 248 பதிவு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் சகல முதியோர் இல்லங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார். (அ-2)

## அமைச்சர் கெஹலிய நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்றையதினம் நாடு திரும்பவுள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சு கூறியுள்ளது.

3 மாதங்களுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் குணமடைந்து நாடு திரும்பிய பின்னர் மீண்டும் தமது பணிகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)



சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் சுருதி 6 வெளியீட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் Rtn. எஸ்.சிவசங்கர் வெளியிட்டு வைக்க சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் ஆரம்பகால தலைவரும் சிறப்பு விருந்தினருமாகிய ஏ.ஜே.ஜி. ஜெயச்சந்திரா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

## வடக்கு முஸ்லிம் மக்களின் தேவை தொடர்பில் தூதுவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவேன்

### பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா தெரிவிப்பு



வடக்கில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களது நிலை குறித்து இலங்கை ஜனாதிபதி மற்றும் தூதுவர்களின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா எலாஹி பலூஜி தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் வவுனியா சாளம்பைக்குளம், தலைமன்னார் மற்றும் முசலி பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதன் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இங்கு வருகை தந்து மீள்குடியேறியுள்ள மக்களது பிரச்சினைகளை, தேவைகளை நேரில் பார்க்க முடிந்தது. மிகவும் கடினமான ஒரு அகதி வாழ்க்கையினை நீங்கள் வாழ்கின்றீர்கள் என்பதை அறிய முடிகின்றது. உங்களது தேவைகள், எதிர்பார்ப்புக்கள் குறித்து அமைச்சர் றிசாத் பதியுதீன் எனக்கு தெளிவாக விளக்கப்படுத்தியுள்ளார்.

மன உளைச்சலுக்குள்ளாகி இருக்கும் உங்களது வாழ்வு விமோசனம் பெற பிரார்த்தனைகளை செய்வோம். அதேபோல் கொழும்பு சென்றதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இலங்கையிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஆகியோரை சந்தித்து உங்களது தேவைகள் குறித்து விளக்கமளித்து உதவிகளை பெற்றுத்தர முயற்சிகளை செய்யவுள்ளேன் என்றார்.

இதேவேளை, இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர்களான மொஹிதீன், லியாவுதீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-9)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இவ் ஆண்டிற்கான பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகள் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஊடாக பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகள் பற்றிய விடயங்களை விஞ்ஞான ஆசிரியர்களுக்கு நோக்கமாக இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதன் முதற்கட்ட நிகழ்வாக க.பொ.த. சாதாரண தரத்திற்கு கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு யாழ். விஞ்ஞான சங்க பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகளுக்கான தலைவர் திருமதி சண்முக யோகினி ரவீந்திரன் நடாத்தினார்.

இக்கருத்தரங்கினூடாக விஞ்ஞான ஆசிரியர்கள் மாணவர்களை பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகளில் இணைந்து கொள்ளும் வாய்ப்பினை கொடுத்து மாணவர்களின் தேடலை அதிகரிக்க வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

## ஊடகவளங்கள் நிலையத்தில் உரையாற்றுவது கருத்துத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இரண்டாவது தொடரான இலங்கையில் பதின்மூன்றாவது சட்ட சீர்திருத்தம் இன முரண்பாட்டுக்கான தீர்வாக அமையுமா? என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல. 84, ஜும்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது என ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் தே.தேவானந்த் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளரான கு.குருபரன் கருத்துக்களை வழங்கவுள்ளார். (அ-7)

## வெளிநாடு சென்ற விரிவுரையாளர்களை மீண்டும் வரவழைப்பதற்கு நடவடிக்கை

### உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்விக்காக வெளிநாடு சென்று நீண்டகாலமாக தங்கியிருந்த 11 விரிவுரையாளர்கள் மீண்டும் தமது பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுவதற்கு திரும்பி வந்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் கூறியுள்ளார்.

கலாநிதி பட்டங்களை கொண்டுள்ள கல்வியியலாளர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் முகமாக இத்தகைய விரிவுரையாளர்களை ஈர்ப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என அமைச்சர் திஸாநாயக்க கூறினார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 205 விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புக்காக வெளிநாடு சென்றதாகவும் இவ்வருடமும் மற்றொரு தொகுதியினர் அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் 20-25 சதவீதமானோர் மாத்திரமே கலாநிதி பட்டங்களை கொண்டுள்ளனர் என ஐ.தே.க. பிரதித் தலைவரான சஜித் பிரேமதாச கூறினார். (அ-2)

# சிறுவர் அரங்கம்

111

# புத்திசாலித் திருடன்



சோமன், சாம்பன், குட்டி ஆகிய மூவரும் கூட்டாகச் சேர்ந்து திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுள் பெரியவனான சோமன் அந்த அணிக்குத் தலைவனாக திகழ்ந்தான். சாம்பன் தலைவனிடம் விசுவாசம் உள்ள ஊழியன்! குட்டி அனைவரிலும் சிறியவன். ஆனாலும், மிகவும் புத்திசாலி. ஒருமுறை அவர்கள் கொள்ளையடித்த பணம், நகைகளைக் காட்டினில் ஒரு பாழடைந்த கோயிலின் கருவறையில் கடவுள் விக்கிரகத்தின் பின்புறம் மறைத்து வைத்தனர். பின்னர், மூவரும் கோயில் மண்டபத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது தலைவன் சோமன், நண்பர்களே! இன்று நாம் கொள்ளை அடித்ததை மூவரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டால், ஒவ்வொருவரின் பங்கும் மிகக் குறைவாக இருக்கும். அதற்குப் பதிலாக நம்மில் ஒருவரே எடுத்துக் கொண்டால் அவன் திருட்டுத் தொழிலை விட்டு விட்டு நிம்மதியாக மற்றவர்களைப் போல் வாழ்க்கை நடத்தலாம். என்ன சொல்கிறீர்கள்? என்றான். சாம்



பன் அதை உடனே ஒப்புக் கொள்ள குட்டி, நம்முள் யார் அதை எடுத்துக் கொள்வது என்று எப்படித் தீர்மானிப்பது? என்று கேட்டான்.

அதற்கு சோமன், இன்று இரவு உறங்கும் போது நம்மில் யார் திருடிய இப்பணத்தைக் கொண்டு இலட்சாதிபதியாக மாறுவது போல் கனவு காண்கிறார்களோ அவன் இதை எடுத்துக் கொள்வான்! என்றான். ஏனைய இருவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

சற்று நேரங்கழித்து மூவரும் கோயில் மண்டபத்தில் படுத்து உறங்க முயன்றனர். ஆனால் ஒருவருக்கும் தூக்கம் வரவில்லை. வயிறு மந்தமாக இருக்கிறது சிறிது நேரம் உலவி விட்டு வருகிறேன்! என்று புறப்பட்ட குட்டி நேராகக் கோயிலின் பின்புறம் சென்றான். மற்றவர்களுக்குத் தெரியாமல் கோயிலுக்குள் புகுந்து கருவறையில் ஒளித்து வைத்திருந்த திருட்டுப் பொருட்களை வெளியே எடுத்து வந்து ஒரு மரப் பொந்தில் மறைவாக வைத்தான். பின்னர் உலவி விட்டு வருபவனைப் போல் மீண்டும் மண்டபத்திற்கு வந்து படுத்துக் கொண்டான். மறுநாள் நல்ல கனவு ஒன்றைத் தான் கண்டதாகக் கூற, ஒவ்வொருவரும் ஒரு கற்பனைக் கதையினை மனதினுள் புனைந்து கொண்டு இருந்தனர். அன்று ஒருவருமே தூங்கவில்லை.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், சோமன் தான் கண்ட கனவினைப் பற்றிக் கூறத் தொடங்கினான். திருட்டுப் பொருட்களுடன் மகத இராச்சியத்திற்குச் சென்றேன். அங்கு சத்திரத்தில் உறங்கும் போது எனது

## அம்புலி மாமா கதைகள்

திருட்டுப் பொருட்களை யாரோ திருடி விட்டனர்.

உடனே மகத மன்னரிடம் சென்று புகார் செய்தேன். அதற்கு மன்னர், ஐயா! நீ அயல் நாட்டவன் என்று நினைக்கிறேன். நாடு முழுதும் திருடர்கள் நிரம்பி இருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க என்னால் இயலவில்லை. அவர்களைச் சிறைப்பிடித்து தருபவனுக்கு என் மகளையும் பாதி இராச்சியத்தையும் தருவதாக அறிவித்திருந்தேன். ஆயினும், இன்றுவரை அப்படிப்பட்ட வீரதீரப் பராக்கிரமன் எனக்குக் கிடைக்கவில்லை! என்றார்.

அதைக் கேட்ட நான், மகாராஜா! ஒரு வார்த்தை சொல்லுங்கள்! அனைத்துத் திருடர்களையும் ஒரு நொடியில் பிடித்து வருகிறேன்! என்று சொல்லி விட்டுச் சென்ற நான் என் சவாலை நிறைவேற்றினேன். திருடர்கள் அனைவரையும் பிடித்து சிறையில் அடைத்து இளவரசியை மணந்து பாதி இராச்சியத்தையும் அடைந்தேன்! என்றான்.

அதற்குப் பின்னர் சாம்பன் தன் கனவை கூறினான். நான், நாம் திருடிய பொருட்களை வைத்து கடல் கடந்து வியாபாரம் செய்ய எண்ணி கப்பல் ஏறினேன். ஆனால் திடீரென வீசிய புயலில் கப்பல் மூழ்க நான் நாகதீவை அடைந்தேன். அங்கு இருந்த நாகக் கன்னியர்கள் இரத்தினங்கள் அணிந்து அழகாக இருந்தனர்.

ஆனால், நான் கொண்டு சென்ற நகைகளைத் தான் அவர்கள் பெரிதும் விரும்பினர். ஒவ்வொரு பெண்ணும் என்னிடம் நகைகள் தருமாறு கெஞ்சினர். நாகதீவின் இளவரசி நாகதேவியே என்னிடம் வந்து கெஞ்சினாள். அவளுக்குத் தராமல் அவளுடைய தோழிகளுக்குத் தர ஆரம்பித்ததும் அவள் என் கையைப் பற்றி, மிச்சமுள்ள நகைகளை எனக்குக் கொடு! பதிலுக்கு நீ எதைக் கேட்டாலும் நான் உனக்குத் தருவேன்! என்று சொல்ல, நான், நீ வேண்டும்! நீ என்னை மணம் புரிந்தால் இந்த நகைகள் அனைத்தும் உனக்கே சொந்தம்! என்றேன். நாகதேவி சம்மதிக்க நான் அவளை மணம் புரிந்து நாகதீவின் மன்னன் ஆனேன்! என்றான்.

புத்திசாலியான குட்டி தன் கனவை கூறத் தொடங்கினான். நமது திருட்டுப் பொருட்களை வைத்து வியாபாரம் தொடங்கி ஓர் இலட்சாதிபதியாக மாறினேன். ஒரு பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். அவளோடு இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த போது திடீரென என் கனவு கலைந்து விட்டது. விழித்துப் பார்த்த போது நீங்கள் இருவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போது கோயிலின் கருவறையில் இருந்து சில திருடர்கள் நாம் ஒளித்து வைத்திருந்த பொருட்களை எடுத்துச் செல்வதைப் பார்த்தேன். அவர்களைத் தடுத்து நிறுத்த என் ஒருவனால் மட்டும் முடியாது என்பதால் உங்களை எழுப்ப முயற்சி செய்தேன்.

முதலில் சோமனை எழுப்பினேன். தலைவா! எழுந்திரு! நமது பொருட்களை திருடர்கள் எடுத்துச் செல்கின்றனர் என்று கூறிய போது, சோமன், மடையா! நமது இராச்சியத்தில் திருடர்களே கிடையாது. நான்தான் அனைவரையும் பிடித்துச் சிறையில் அடைத்து விட்டேனே! என்று உளறிக் கொண்டே திரும்பிப் படுத்து தூங்கிவிட்டான்.


உடனே சாம்பனை எழுப்பினேன். அவன் தூக்கத்தில் நாகதேவி! உன்னுடன் மகிழ்ச்சியாக நான் இருக்கும் சமயத்



தில் எந்த முட்டாள் நம் இருவரையும் தொந்தரவு செய்கிறான்? நான் யாரையும் பார்க்க முடியாது! என்று சொல்லி விட்டு நன்றாகத் தூங்க ஆரம்பித்தான்.

இவ்வாறு நீங்கள் இருவரும் பலமுறை எழுப்பியும் எழுந்திருக்காததால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்குள் திருடர்கள் நம் பொருட்களை எடுத்துச் சென்று விட்டனர்! என்று முடித்தான்.

அடப்பாவி! என்று கத்திய சோமன், என்ன உளறுகிறாய்? நீ கண்டது கனவா? இல்லை நனவா? நம் பொருட்களை யாரோ எடுத்துச் சென்றதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருந்தாய்? என்று சீறினான். தலைவா! இவனுக்குத் தூக்கக் கலக்கம் இன்னும் மறையவில்லை. அதனால் ஏதோ உளறுகிறான்! வா, நம் பொருட்களைச் சென்று பார்ப்போம்! என்று கூற இருவரும் கோயிலின் கருவறைக்குள் நுழைந்து பார்த்தனர். அவர்களுடைய திருட்டுப் பொருட்களை காணவில்லை. இருவரும் ஆவேசத்




துடன் திரும்பி ஓடி வந்து குட்டியைப் பிடித்து உலுக்கினர்.

நான் சொல்வது உண்மை தான் நீங்கள் இருவரும் கனவுலகத்தில் இருந்ததால் நான் பலமுறை உங்களை எழுப்பியும் நீங்கள் எழுந்திருக்கவில்லை என்றான் குட்டி.

உடனே ஏனைய இருவரும் ஒரே சமயத்தில் வீணாகப் பொய் சொல்லாதே! நாங்கள் இருவரும் இரவு முழுவதும் உறங்கவேயில்லை. அப்போது கனவு எப்படி வரும்? நாங்கள் கூறியது பொய் என்று சொல்ல, ஆகா! அப்படியானால் நீங்கள் கனவே காணவில்லை. கனவு கண்டது நான் ஒருவன் தான்! அதனால் திருட்டுப் பொருட்கள் என் ஒருவனுக்கே சொந்தம்! ஒப்புக் கொள்கிறீர்களா? என்று அவர்களை மடக்கினான் குட்டி. பின்னர் விரைந்து சென்று தான் மறைத்து வைத்திருந்த பொருட்களை எடுத்து வந்தான்.

சோமனும், சாம்பனும் திகைத்து நின்றனர். தங்களை மிகவும் சாமர்த்தியமாகக் குட்டி போட்டியில் தோற்கடித்ததை எண்ணி வெட்கம் அடைந்தனர். பின்னர் ஒருவாறு தங்களைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருவரும் குட்டியை வாழ்த்தி அனுப்பினர்.

# “இயற்கையுடன் ஒன்றிணைவோம்”



உலகம் உலகமயமாதலின் (Globalization) விளைவாக விவசாயம் வியாபாரமயமாகிவிட்டது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி விவசாயிகளும் தமது உற்பத்தியை பெருக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் இரசாயனப்பசளைப் பாவனையானது சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால் எதிர்கால விவசாயம் கேள்விக் குறியாகியுள்ளது.

**இரசாயனப் பசளைப் பிரயோகத்தால் ஏற்படும் தீமைகள்.**

✱ மண் வளம் குன்றும்.

✱ நச்சுத் தன்மையான விவசாய உற்பத்தி

✱ நீர்ப்பாசன நீருடன் சேர்ந்து இலகுவில் கழுவப்பட்டுச் சென்றுவிடும்.

✱ [illegible]தகமற்ற போசணை இடை தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

✱ மண்ணின் கட்டமைப்பு உடைக்கப்படும்.

✱ மண்வாழ் நுண்ணங்கிகள் இறக்கும்.

✱ நிலத்தடி நீர் மாசடையும் (N கூடும்)

1950 இற்கு முந்திய காலங்களில் விவசாயிகள் முற்றுமுழுதாக சேதனப்பசளைகளை பாவித்தே சகல பயிர்களையும் விளைவித்து வந்தனர். இரசாயனப்பசளைப் பிர யோகத்தால் ஏற்படும் தீமைகளிலிருந்து எம்மையும் நிலத்தையும் பயிர்களையும் பாதுகாக்க ஒரே வழி சேதனப்பசளை இடுவதாகும். சேதனப்பசளைகள் தாவர மற்றும் விலங்குகளிகளின் எச்சங்கள், கழிவுகள் என்பவற்றில் இருந்து பெறப்படும் இயற் கைப் பசளையாகும்.

பயிர்ச்செய்கையின் வெற்றி பெருமளவில் பயிர்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. பயிர்களின் வளர்ச்சியில் பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றபோதிலும் தாவர போசணைச் சத்துக்கள் பிரதான காரணியாக அமைகிறது. பயிரின் வளாச்சிக்கு 17 வகையான போசணைச் சத்துக்கள் அத்தியாவசியமானவையென அறியப்பட்டுள்ளது. இம் மூலகங்கள் போதிய அளவில் பயிரிற்கு கிடைக்காவிடின் பயிரின் வளர்ச்சி குன்றுவதோடு விளைச்சலின் அளவு, தரம் என்பன பாதிக்கப்படும். மேலும் போசாக்கு குறைபாட்டு நோய்களையும் ஏற்படுத்தும்.

பயிரிற்கு அவசியமான போசணை மூலகங்கள் பயிர்களால் பயன்படுத்தப்படும் மூலகங்களின் அளவைக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

| மாமூலகங்கள் | நுண்மூலகங்கள் | சுவட்டு மூலகங்கள் |
|---|---|---|
| காபன் | கல்சியம் | இரும்பு |
| ஐதரசன் | மக்னீசியம் | நாகம் |
| ஒட்சிசன் | கந்தகம் | மங்கனின் |
| நைதரசன் | | செப்பு |
| பொட்டாசியம் | | போரன் |
| பொசுபரசு | | மொலிப்டினம் |
| | | குளோரின் |
| | | நிக்கல் |

முற்காலத்தில் பல்வேறு வகையான சேதனப்பசளைகளைப் பயன்படுத்தி சிறப்பான விளைச்சலையும் பெற்று வந்திருக்கின்றனர்.

✱ வீடு வேய்ந்த பழைய பனம் ஓலைகளை வயலில் பரவி விடுவார்கள். பின் இவை உக்கியதும் மண்ணுடன் உழுது புரட்டப்படும். இப்படி பனம் ஓலைகளை பரவுவதால் கோரை, அறுகு போன்ற பல்லாண்டுக்களைகள் சிறப்பாகக் கட்டுப்படுத்தப்படும்.

✱ நெல் அறுவடை செய்தவுடன் வயலில் இருக்கும் ஈரப்பற்றை பயன்படுத்தி சணல் விதைகளை விதைத்து உழுது மறுத்து விடுகிறார்கள். சணல்முளைத்து பூக்கும் பருவத்தில் இவற்றை வெட்டி மண்ணினுள் புதைத்து விடுவார்கள். ஏக்கருக்கு சுமார் 40-50 கிலோ சணல் விதைகளை விதைப்பின்மிகவும் அடர்த்தியான சணல் பயிரை உற்பத்தி செய்யலாம்.

✱ இதை விட காய்ந்த இலை குலைகள், சருகுகள், மாட்டுச்சாணம், வீட்டுக்கழிவுகள் போன்ற சேதனப்பசளைகள் பரவலாக பலராலும் பயன்படுத்தப்படுகின்றது.

**இச் சேதனப்பசளைகளை பயன்படுத்து வதன் அனுகூலங்கள்**

✱ மண்ணின் இரசாயனத் தன்மைகள் விருத்தியடைகின்றன. நைதரன், பொசுபரசு, பொட்டாசு ஆகிய பிரதான மூன்று போசணைச் சத்துக்களைவிட மேலதிகமாக நுண்போசணை மூலகங்கள் கிடைக்கின்றன. ஆனால் யூரியா, ரீ.எஸ்.பி, எம்.ஓ.பி. போன்ற பசளைகளினால் நுண்போசணை மூலகங்கள் கிடைப்பதில்லை. எனவே இடப்படும் சேதனப் பசளை களின் வினைத்திறன் அதிகமானதாக இருக்கும்.

✱ மண்ணின் கட்டமைப்பை விருத்தி செய்து மண் இலகுவாக்கப்படும். இதன் மூலம் வேர் வளர்ச்சிக்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்தும். மண்ணீரை பிடித்து வைத்திருக்கும் தன்மை விருத்தியடையும். மண்ணின் காற்றோட்டத்தை விருத்தி செய்வதனால் வேர் நன்கு விருத்தியடையும். மேலதிகமான நீர் ஊடு வடிந்து செல்ல உதவும். இதனால் மண்ணின் உவர்த்தன்மையைக் குறைக்கும்.

(தொடரும்)

## யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளின் முடிவுகள்

**உயரம் பாய்தல்**

ஆர். செந்தூரன் (யா/ யாழ்ப்பாண கல்லூரி), ஜி. கென்றிக்ஷன் (யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி), எம். தனுசன் (யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர்),

**ஈட்டியெறிதல்**

ஆர்.ஜோன் பற்றிக் (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தி), ரி. டிலக்ஷன் (யா/ இந்துக் கல்லூரி), டி.பிரசாந் (யா. ஊர் காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி.

**100 மீற்றர் தடைதாண்டி ஓட்டம்**

பி.திலுக்ஷன் (யா/ மகாஜனா கல்லூரி), கே. நிறோஜன் (யா/ மத்திய கல்லூரி), என். நிருஜன் (யா/ விக்டோறியா கல் லூரி)

**400 மீற்றர் தடைதாண்டி ஓட்டம்**

பி.திலுக்ஷன் (யா/மகாஜனா கல்லூரி), பி.சலுஜன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கே.நிலுஜன் (யாழ்/ மத்திய கல்லூரி)

**19 வயதிற்கு கீழ்ப்பட்டோர்**

**1500 மீற்றர் ஓட்டம்**

எ. அனோஜன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), கே. தவநித் (யா/ யாழ்ப்பாண கல்லூரி), என். தினேஸ்குமார் (யா/ மத்திய கல்லூரி)

**தட்டெறிதல்**

கே. ஜெயதீப் (யாழ்/ பருத்தித்துறை சித்தி விநாயகர்), ஜே. அனோஜன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), கே.சிலோஜன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி)

**5000 மீற்றர் ஓட்டம்**

ஜே.சுரேஸ் (யா/விக்டோறியா கல்லூரி), என். தினேஸ்குமார் (யா/ மத்திய கல்லூரி), எஸ். ஒஸ்வேட்(யா/ சென்.ஹென்றியரசன் கல்லூரி)

**400 மீற்றர் தடைதாண்டி ஓட்டம்**

ஜே.ஜனந்தன் (யா/ மகாஜனா கல்லூரி), எ.அஜித்தருண் (யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.சஜீவன் (யாழ். மத்திய கல்லூரி)

**21 வயதிற்கு கீழ்ப்பட்டோர்**

**1500 மீற்றர் ஓட்டம்**

ஆர்.சந்திரகுமார் (யா/சென் ஹென்றியரசன் கல்லூரி), பி.தயாகரன் (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி), வை. நியான்சன் (யா/ யாழ்ப்பாணக் கல்லூரி)

**100 மீற்றர் ஓட்டம்**

ஏ.அருட்குமரன் (யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி), யு. அகிலன் (யா/அருநோதயாக் கல்லூரி), எம்.தனுசன் (யா/ ஹாட்லிக் கல்லூரி)

**400 மீற்றர் ஓட்டம்**

என். றஜீகரன் (யா/ மட்டுவில் சாவகச்சேரி சந்திவரோதயாகக் ம.வித்தி), எஸ். திலீபன் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜி. சிவேந்திரன் (யா/ இந்துக் கல்லூரி),

**400 மீற்றர் ஓட்டம்**

இ.ஜோய் (யா/ மத்திய கல்லூரி), எ.அனோஜன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), எஸ். சஜீவன் (யா/மத்திய கல்லூரி)

**200 மீற்றர் ஓட்டம்**

எம்.ஜெனோதன் மைக்கல் (யா/மானிப்பாய் மெமோறியல் வித்தி), ரி.அபிமன் (யா/ மத்திய கல்லூரி), சி.மரின்எல்விஸ் (யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி)

**400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

ஜே.ஜனந்தன் (யா/மகாஜனா கல்லூரி), எ.அஜித்தருண் (யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எ.சஜீவன் (யா/ மத்திய கல்லூரி).

(தொடரும்)

## பொருளாதாரக் குற்றங்கள் காரணமாக இலங்கைக்குள் பாரிய நிதி இழப்பு

### கே.பி.எம்.ஜி.நிறுவனத்தின் ஆய்வில் தகவல்

பொருளாதார குற்றங்கள் காரணமாக இலங்கைக்கு கடந்த இரண்டு வருடங்களில் பல பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

சர்வதேச கணக்கியல் நிறுவனமான கே.பி. எம்.ஜியின் ஆய்வின்படி பொருளாதாரக் குற்றம் அதிகரித்துள்ளமையை 83 வீத தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

கைத்தொழில் துறையில் மாத்திரம் பொருளாதாரக் குற்றம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 3 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளன. விவசாயத்துறையில் 2.5 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளன.

இதனை தவிர இலங்கையில் நிதி சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையிலேயே அதிகளவான பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெறுகின்றன.

இந்த ஆய்வுக்காக இலங்கையில் உள்ள 50 மில்லியன் முதல் 10 பில்லியன் ரூபாய்களை வருட வருமானமாகக் கொண்ட 400 அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் 5 ஆயிரம் வரையிலான பணியாளர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

இதில் 70 வீதமான பணியாளர்கள் நிறுவனங்களில் ஊழல்கள் இடம்பெறுவதை ஏற்றுக் கொண்டுள்ளதாக இவ்வாய்வு குறிப்பிட்டுள்ளது. இதில் 44 வீத பொருளாதார குற்றங்கள் விநியோக பிரிவுகளிலேயே இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது. (அ-2)



யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்கள் பங்கேற்ற தமிழ்த்தினப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் சிந்து நடைக் கூத்து போட்டியில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்ற மாணவர்களுடன் பாடசாலை அதிபர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசின் செயற்பாட்டுத்திட்டம் என்ன?

## லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் கேள்வி

(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக அரசாங்கம் தயாரித்துள்ள செயற்பாட்டுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச்செயற்பாட்டுத்திட்டம் தொடர்பாக சிவில் சமூகத்தில் கூட கலந்துரையாடல்கள் இடம் பெறவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவற்கான செயற்பாட்டுத் திட்டத்தை மிக விரைவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இத்தகைய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அது தொடர்பாக பொது மக்களையும் பாராளுமன்றத்தையும் தெளிவுபடுத்த வேண்டும் என தமது கட்சி கோரி வருகிறது.

எனினும் இதனைப் பொருட்படுத்தாது இரகசியமான முறையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்துடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்காவுக்கு சென்றிருக்கிறார்.

போர்க்குற்றங்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அரசாங்கம் கூறிவருகிறது. எனினும் அமெரிக்காவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்களின்போது போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கையில் உள்ளக மட்டத்தில் விசாரணை நடத்தப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே, இது குறித்து வினவுவதற்காக வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்றத்திற்கு வரும்வரை நான் காத்திருக்கிறேன் என்றார். (அ-2)

## மாவட்ட மட்டத்தில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவி ஜெ.ஜனார்த்தனி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையின் மிக நீண்ட கால வரலாற்றில் மாவட்ட மட்டத்தில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சீனர்கள் இலங்கையில் அடைக்கலம்

(கொழும்பு)

பாரியளவில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சீனர்கள் இலங்கையில் அடைக்கலம் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் கோடீஸ்வர வர்த்தகர்களின் வங்கிக் கணக்குகளிலிருந்து இரகசியமான முறையில் பணத்தைப் பெற்றுக் கொண்ட 17 சீனர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஏழு பேர் சீனப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் சீனக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது. சீனாவில் வாழும் கோடீஸ்வர வர்த்தகர்களுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்து பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடன் அட்டை மோசடிகளிலும் குறித்த சீனர்கள் ஈடுபட்டுள்ளனர். சர்வதேச பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது வேறும் நாடொன்றிலிருந்து இந்த மோசடி செய்யப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கணனியின் உதவியுடன் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பூங்கா வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து இந்த குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது.

பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மாதமொன்றுக்கு ஒரு தடவை குறித்த கும்பலைச் சேர்ந்த சிலர் இலங்கையிலிருந்து சீனா செல்வதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சர்வதேச பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ-2)

# உலகத்தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு பேராளர் விண்ணப்பம் அனுப்பலாம்

கொழும்பு தமிழ்ச்சங்கம் தனது 70 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இவ்வாண்டு ஜூன் 1, 2, 3 ,4 ஆம் திகதிகளில் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை தமிழ் இலக்கியமும் சமூகமும் இன்றும் நாளையும் என்ற தொனிப்பொருளில் நடத்தவுள்ளதாக கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று நாட்களிலும் மாநாட்டு தொனிப்பொருளுக்கமைவான ஆய்வரங்குகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். நான்காம் நாள் சென்னை பாரதியார் சங்கமும் கொழும்பு தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் பாரதிவிழா இடம்பெறும்.

மாநாட்டில் பேராளராக கலந்து கொள்ள விரும்புபவர்கள் உரிய விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்து பேராளர் கட்டணத்தையும் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் இணைத்து எதிர்வரும் 3 1 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

பேராளர் கட்டணமாக இலங்கை பேராளர்கள் தலா 1500 ரூபாவும் வெளிநாட்டு பேராளர்கள் 25 அமெரிக்க டொலரும் செலுத்த வேண்டும்.

மாநாடு நடைபெறும் நாட்களில் உணவு, தேநீர் போன்றவற்றுடன் மாநாட்டு சிறப்பு மலர், ஏனைய வெளியீடுகள், கோப்பு ஆகியவை அடங்கிய பொதியும் வழங்கப்படும். ஆய்வாளராக கலந்து கொள்ள விரும்புபவர்களும் பேராளர்களாக சேர்ந்து கொள்ள வேண்டும்.

பேராளர் விண்ணப்பங்களை இலக்கிய குழுச் செயலாளர், கொழும்பு தமிழ்ச்சங்கம், 7,57 ஆவது ஒழுங்கை, கொழும்பு 06 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு 0778956761 என்னும் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரி sangamconference2012@gmil.com இல் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்ப படிவங்களை சுயமுகவரியிட்ட,முத்திரை ஒட்டிய (நீண்ட) கடித உறை ஒன்றை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்படிவங்களை தமிழ்ச்சங்கத்தின் www.colombotamilsangam.com என்ற இணையத்தளம் மூலமும் பதிவிறக்கம் செய்யலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மாணவர்கள் கௌரவிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை கற்றல் வள நிலையத்தில் அதிபர் த.பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அலதாங்கி ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி எல்.எப். நடேசமூர்த்தி, கிராம சேவையாளர் பெனடிக்ற் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-266)

## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்ற வழக்குடன் தொடர்புடைய படகுகள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும் என முல்லைத்தீவு நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார். (அ-3-267)

# போதனா வைத்தியசாலையில் 11 துவிச்சக்கரவண்டிகள்

## பொறுப்பேற்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கைவிடப்பட்டு உரிமை கோரப்படாத 11 துவிச்சக்கர வண்டிகள் உள்ளன.

இவற்றினை உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இச் சைக்கிள்களில் 5 சைக்கிள்கள் பெண்களுக்குரியது என்றும் 6 சைக்கிள்கள் ஆண்களுக்குரியவை எனவும் தெரிவித்துள்ளனர். இத் துவிச்சக்கரவண்டிகள் யாழ்.போதனா வைத்திசாலையின் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் கைவிடப்பட்ட நிலையில் பாதுகாப்பு ஊழியர்களினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள குறித்த சைக்கிள்கள் வெயிலிலும் மழையிலும் நிற்பதனால் மிக வேகமாக துருப்பிடித்து வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ-4)

**ST. JOHN'S COLLEGE, JAFFNA.**

**VACANCIES**

Applications are hereby invited from the qualified persons for the following teaching vacancies.

1. **Biology - English medium**
   ➤B.sc. in the field of Bio Science or Agriculture
2. **Agriculture**
   ➤B.sc (Agriculture) or Diploma in Agriculture
3. **Accounting/ Economics/ Business Studies- English medium**
   ➤BBA.or B.Com

Sports and IT skills would be an added advantage.

Please send your complete CV including the contact details of two non related referees by post or via e-mail on or before 28th May 2012 to the following address. Only short listed candidates will be called for the interview.

**The Principal,**
**St.John's College,**
**Jaffna.**
**stjohns@sltnet.lk**

(C-065)

இலட்சியத்தை அடைய கடக்க வேண்டிய தூரத்தை பற்றிக் கவலையில்லை. ஆனால் அதை நோக்கி முதல் அடிவைப்பதுதான் கடினமானது. -டுமாக்வஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ‘அந்நியன்’ போன்ற தலைமையில் புதிய கட்சி உதயமாக வேண்டும்

வட பகுதியில் நடக்கும் அட்டகாசங்களைப் பார்க்கும்போது நெஞ்சம் வெடிக்கும்போல் இருக்கிறது.

சிறுவர் கடத்தல், இனந்தெரியாதோரின் தாக்குதல், கலாசார சீரழிவு, குடும்பப் பிறழ்வுகள், மத மாற்றங்கள், கொள்ளைகள்,

இந்து ஆலயங்களில் நடக்கும் திருட்டுக்கள், தமிழ் அரசியல் தலைமைகளின் பித்தலாட்டங்கள், மதத் தலைமைகளின் கபடத்தனங்கள் இவற்றை எல்லாம் பார்க்கும்போது கடந்த காலத்தை நினைக்கவே செய்கிறது.

• என்ன செய்வது! அந்த நினைப்புகள் இனிச் சாத்தியமற்றவை என்று தெரிந்துதானே இத்தனை அட்டகாசங்கள் அரங்கேறியுள்ளன.

ஆயுதம் ஏந்திப் போராடுதல் என்பது எதிர்காலத்தில் அர்த்தமற்றது மட்டுமல்ல, அதனை மனித சமூகம் ஏற்கப்போவதும் இல்லை.

எனவே அகிம்சை வழியில் போராட வேண்டிய காலம் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் தோற்றுவிட்டதாயினும் அகிம்சைப் போராட்டத்திற்கு ஜனநாயக நாடுகள் கட்டுப்பாடு விதிக்க முடியாது.

எனவே ஆயுதம் ஏந்தாத புதிய அமைப்பு அல்லது புதிய கட்சி ஒன்றை மீள் உருவாக்கம் செய்வது கட்டாயமானதாகும்.

இவ்வாறு நாம் கூறுகின்றபோது என்ன என்று யாரேனும் விழிப்படையலாம்.

ஆனால்; இந்த மண்ணில் நடக்கக்கூடிய அநியாயங்களைப் பார்க்கும்போது இப்படித் தான் எண்ணத் தோன்றுகின்றது.

முஸ்லிம் ஒருவரால் கடத்தப்பட்ட சிறுவன் மீட்கப்பட்ட போது, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்தச் சிறுவனுக்கு ç ï , s ‘பொலிஸ்நீதி’ எப்படி உள்ளதென்பதை உணரமுடியுமல்லவா?

இதுமட்டுமல்ல; நேற்றுக்கூட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலை மாணவி, அந்தப் பாடசாலைச் சீருடையுடன் ஒழுங்கையில் நின்று இளைஞன் ஒருவருடன் நீண்டநேரமாக கதைத்துக் கொண்டு நின்றார்.

அந்த வீதியால் போகின்றவர்கள் முகச்சுழிப்புடன் அந்த மாணவியையும் இளைஞனையும் பார்த்தனர்.

ஆனால் அவர்கள் இருவரும் கலங்கவேயில்லை.

எப்படி இருக்கிறது நிலைமை?

இந்த நிலைமையை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

பொலிஸார்-சமூகம் முயற்சித்தாலும் முடியவே முடியாது.

ஆகையால்தான் புதிய கட்சி தேவையென்றோம்.

இந்தக் கட்சி மூன்று பிரிவுகளாகச் செயற்பட வேண்டும்.

அதில் ஒன்று அரசியல் பிரிவு,
இரண்டாவது சமூகவியல் பிரிவு,
மூன்றாவது புலனாய்வுப் பிரிவு.

இதில் தமிழ்ப் புத்திஜீவிகள், நேர்மைத்திறன் கொண்ட மனிதர்கள், வீர இளைஞர்கள் இடம் பெறவேண்டும்.

நீதிநிலைக்க நீதிமன்றங்களையும், சட்டத் துறையையும் தகுந்தமுறையில் பயன்படுத்த வேண்டும்.

சுருங்கக்கூறின் ‘அந்நியன்’ படத்து கதாநாயகன் போன்ற தலைவன் இந்தக் கட்சிக்குத் தலைமை தாங்குவது சாலப்பொருத்துடையது. நடக்குமா?

# இந்து நாகரிகம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவினரால் அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்து நாகரிகம் தொடர்பான வதிவிடக் கருத்தரங்குகள் எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்குகள் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பயிலரங்கின் ஆரம்ப வைபவமும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான நூற்பொதி வழங்கும் வைபவமும் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் திணைக்கள உதவிப் பணிப்பாளர். திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்மணி அகளங்கன், பேராசிரியர் சி.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் நூற் பொதிகளுக்கான கடிதம் கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு தங்களுக்குரிய நூற் பொதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே இப்பயிலரங்கில் கலந்து கொள்ள விண்ணப்பம் அனுப்பி திணைக்களத்தின் கடிதம் கிடைக்கப்பெற்ற திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வவுனியா சுத்தானந்த சபைக்கு வருகை தருமாறு இத்திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் கேட்டுள்ளார். (அ-2)

## தமிழக பூசாரிகளால் வழங்கப்படும் இருவாரகால பூசகர் பயிற்சி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழக கிராமக்கோவில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த 3 பூசாரிகளின் மூலம் இலங்கைப் பூசகர்களுக்கான பயிற்சி எதிர்வரும் ஜூன்மாதம் 11ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முழுமையாக வதிவிடப் பயிற்சியாக அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் பூசகர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள், ஆலயங்களின் அனுஷ்டான விதி முறைகள், அர்ச்சனை முறைகள், கிரியைகள் தொடர்பான விளக்கங்கள், முறையான மந்திர உச்சாடனங்கள், பிரார்த்தனை, தியானப் பயிற்சிகள், எளியமுறை யோகாசனப் பயிற்சிகள், திருமுறைப் பஜனைப் பாடல்கள் போன்ற இந்து ஆலயங்களில் பேணப்பட வேண்டிய அடிப்படைக் கிரியை மற்றும் அனுட்டானங்கள் தொடர்பான விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சியைப் பெற விரும்பும் அந்தணர் அல்லாத இந்துப்பூசகர்கள் உடனடியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 0112 552641, 0112552642 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு இத்திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் கேட்டுள்ளார். (2)

## ஆயுர்வேத பாதுகாப்பு சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் மாதாந்தக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிரதேச செயலக ஆயுர்வேத பாதுகாப்புச் சபைச் செயலாளர் டாக்டர் செல்வி க.பொன்னையா அறிவித்துள்ளார்.

அன்றையதினம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி விரிவுரையாளர் டாக்டர் ஆர். தில்லைவாசன் சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் இரசாயனம், பஸ்பம், செந்தூரம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கவுள்ளார் எனவும் அறிவித்துள்ளார். (அ-9)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணைப்பதி மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஆலடி ஆதிவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் அலங்கார உற்சவம் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை விசேட அபிசேக ஆராதனைக்ளும் நடைபெற்று வீதியுலா வருதலும் நடைபெறும். நாளை சனிக்கிழமை காலை பொங்கல் விழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)




*இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வழிபட்டு முத்தி இன்பம் பெறும் பொருட்டே* என நாவலர் பெருமான் கூறிப் போந்தார். எல்லாப் பிறப்புகளையும்விட மனிதப்பிறப்பே உயர்வானது. இறைவனை வழிபட வாய்ப்பானது. இறைவனைக் கண்ணாரக் கண்டு வழிபடுவதற்கு இந்த மண்ணிலே மனிதப்பிறவியை மீண்டும் பெற அப்பர் ஆசைப்படுகிறார். இக்கருத்தினை மணிவாசகரும் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய நிலையைப் பற்றிக் கூறும்போது *நாயினேன்* என மிகவும் இழித்துரைத்துள்ளார். மனிதனாக இருந்தால் இறைவனை உணரும் மனப்பக்குவம் இருக்கும். ஆனால் நாயைப்போலச் செயற்படுவதால் இழிந்த குணங்கள்தான் என்னிடம் குடிகொண்டுள்ளன. எனவே நான் மீண்டும் மனிதனாகப் பலமுறை வந்து இப்பூமியிலே பிறக்கவேண்டும். அப்போது இறைவனை முழுமனதாக வழிபட்டு முக்தியடையலாம் என எண்ணுகிறார்.

இறைவன் நாயைப்போன்ற தன்னை இரக்கத்துடன் வந்து மெய்யாக ஆட்கொண்ட நிலையை நினைவுபடுத்திப் பார்க்கிறார். தான் உலகவாழ்வியலில் இன்பங்களிலே அமிழ்ந்துகிடந்த பழைய வாழ்வியல் அவருக்கு நினைவு வருகிறது. அதனால் நிச்சயமாக இறைவன் தன்னை மீண்டும் வந்து ஆட்கொள்வான் என்ற நம்பிக்கையுண்டாகிறது. எனவே பலமுறை பிறந்து இறப்பதற்கும் தான் தயாராக இருப்பதாகக்கூறி இரந்து நிற்கிறார். மனிதப் பிறவியால் இறைவனை மறவாது வழிபடும் மனப் பக்குவம் ஏற்படும்.

மணிவாசகருடைய இத்தகைய பக்தி நிலைக்கான சிறப்பான வழிகாட்டல் எல்லோருக்கும் பொருந்துவதாகவுள்ளது. முன்னையோரது வாழ்வியற் செயற்பாடுகளை மீளநோக்கும் போது மணிவாசகர் ஓர் உண்மையை நன்குணர்ந்து கொண்டார். அதனால் இப் பிறவியில் இறையருள் கைகூடா விடின் *மாண்டு,மாண்டு வந்துவந்து மன்ன நின் வணங்கவே* என்று கேட்கிறார். வணக்கத்தைக் குறிப்பிடும் போதும் போற்றி போற்றி என அடுக்கு மொழியைப் பயன்படுத்தியுள்ளார். இன்று இறைவழிபாடு பற்றிய நம்பிக்கை குறைவடைந்து வருகிறது. விஞ்ஞான அறிவால் தனக்கு வேண்டிய எல்லாவற்றையும் பெறலாம் என்னும் இறுமாப்புடன் இன்றைய மனிதவாழ்வு நடந்து கொண்டிருக்கிறது. இறுகிப்போன இந்த மனிதர்களின் மனங்களைச் செம்மைப்படுத்துவதற்கு மணிவாசகர் காட்டிய வழியே ஏற்றது. ஆனால் அதை விளங்கிக்கொள்ளும் மனநிலையில் இன்றைய மனிதர் இல்லை. வழிபாட்டிடங்களும் ஒரு வணிகக்களமாக மாறிவிட்டன. அருட்கொள் முதலைவிடப் பொருட்கொள்முதலே பெரிதும் நடைபெற்று வருகிறது. ஐம்புலன்களையும் அருட்திருமேனிகளில் பதியவைக்கும் பக்குவம் யாரிடமும் இல்லை. யாருக்கும் இறைவன் கோல அழகில் ஈடுபாடும் இல்லை. புறச்சூழலில் உள்ளபொருள் அழகில் புலனைச் செலுத்திப் புறந்திரியும் கோலமே இப்போது மலிந்துவிட்டது. இந்நிலையில் இவர்களை வழிக்குக் கொணரவும் பக்திநெறியில் ஆற்றுப்படுத்துவதற்கும் இறைவனிடம் வேண்டுதல் செய்யவேண்டியுள்ளது. பிராரர்த்த வினை அனுபவிக்க வேண்டியிருப்பின் மீண்டும் பிறவியெடுத்து இறைவழிபாடு செய்து பரகதியை அடையலாம்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*வேண்டும் நின் கழற்கண் அன்பு*
*பொய்மை தீர்த்து மெய்மையே*
*ஆண்டு கொண்டு நாயினேனை*
*ஆவ வென்றருளு நீ*
*பூண்டு கொண்டாடியனேனும்*
*போற்றி போற்றி யென்றும் என்றும்*
*மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன*
*நின் வணங்கவே*

# தனியார் பேருந்துகள் சேவையில் இல்லை

## பயணிகள் சிரமம்

(பருத்தித்துறை)

நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி காலை 6.45 மணிக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து சேவை தற்காலிகமாக தடைப்பட்டிருப்பதனால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

காலையில் பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், பல்வேறு தேவைகளுக்காக செல்லும் பயணிகள் எனப் பலரும் இச்சேவையினை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இத்தனியார் பேருந்து சேவை இடம்பெறாத காரணத்தால் பயணிகள் இடநெருக்கடியுடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடநெருக்கடியுடன் பயணத்தினை மேற்கொள்வதனால் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இத்தனியார் பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7-10)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் திருவாய் மலர்ந்தோம்

## அறிக்கை கொடுக்கவில்லை என்கிறார் அமுனுகம

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க செயலர் ஹிலாரி கிளின்டனிடம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் எழுத்து மூலமான எந்த ஆவணத்தையும் கொடுக்கவில்லை என்று வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனுமக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்றிட்டம் ஒன்று விரைவில் தயார் செய்யப்படும்.

இந்த செயற்றிட்டம் வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களினதும் பங்களிப்புடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

எப்போது இந்த செயற்றிட்டம் தயாராகும் என்று நான் குறிப்பிட்டுக்கூற முடியாது. ஆனால் விரைவில் அது தயாராகிவிடும்.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் சந்தித்த போது எழுத்து மூலமான எந்த ஆவணத்தையும் அவரிடம் கொடுக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த அரசின் திட்டங்களை அவர் வாய்மொழியாகவே பரிமாறினார் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# எதிர்க்கட்சி பதில் தலைவராக ஜோன் அமரதுங்க எம்.பி.



பதில் எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அவுஸ்திரேலியாவிற்கு உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொள்ள இருப்பதனால் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்புக்கள் ஜோன் அமரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 5ஆம் திகதி வரையில் ஜோன் அமரதுங்க பதில் எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றவுள்ளார். கடந்த காலங்களிலும் பதில் எதிர்க்கட்சித் தலைவராக ஜோன் அமரதுங்க கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவிற்கு பதில் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பினை ரணில் விக்ரமசிங்க இதுவரையில் வழங்கியதில்லை.

சஜித் தரப்பிற்கும் ரணில் தரப்பிற்கும் இடையில் நிலவி வரும் கருத்து முரண்பாடே இதற்கான காரணம் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மாகாணமட்ட தமிழ்த்தினப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டிக்கு தெரிவாகியுள்ளவர்களுக்கான போட்டி நிகழ்வுகள் யாவும் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்போட்டி தொடர்பாக பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கு உரிய மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தங்கள் வரவினை பதிவு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# மாநகர சபையின் மே மாதக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நடப்பு ஆண்டுக்கான ஐந்தாவது (மே மாத) மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி பற்குணராசா தலைமையில் நடை பெறவுள்ளதாக யாழ். மாநகர சபை செயலாளர் திருமதி ரு. சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-7)

# மஹோற்சவம்

வேலணை மேற்கு பெரியபுலம் அருள்மிகு மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு புதிய சப்பறத்திருவிழாவும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இரதோற்சவ திருவிழாவும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-7)

# இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள்

(மாங்குளம்)

ஜி.ஐ. ஸ்சற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 4 மாதகால தொழிற்றுறை பயிற்சியொன்று மட்டக்களப்பில் வதிவிட வசதிகளுடன் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்காலத்தில் பங்குபற்றும் நாள் ஒன்றிற்கு ரூபா 225 பெறுமதியான உலர் உணவுப்பொருட்களும் மேலும் போக்குவரத்திற்கான உதவித்தொகை மற்றும் வியாபார அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளும் கடன் வசதி பெறுவதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.

பயிற்சி முழுமையாக முடிவுற்றதும் (NVQ) சான்றிதழ் வழங்கப்படும். இலவசமாக நடைபெறும் மேற்படி பயிற்சிக்கு மட்டுப்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

எதிர்வரும் ஜுன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் GIZ- DETA VOCATIONAL TRAINIG, இல.17, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சியில் -0773058393, முல்லைத்தீவில்-0772996053, வவுனியாவில் -0772996058 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியுமென இந்நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இதில் கட்டட தொழிற்றுறை தொழில்நுட்பம், மரவேலை தொழில்நுட்பம், மின்னியல் வல்லுநர் தொழில்நுட்பம், நீர்க்குழாய் பொருத்துநர் தொழில்நுட்பம், கணனி தொழில்நுட்பம், அலுமினிய பொருத்துநர் தொழில்நுட்பம், கையடக்கத்தொலைபேசி தொழில்நுட்பம், மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பம், வானொலி, தொலைக்காட்சி தொழில்நுட்பம், மின் ஒட்டுவேலை (வெல்டிங்) ஆகிய பயிற்சிநெறிகளே நடைபெறவுள்ளன. (அ-9-261)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையிலான கோலம் போடுதல், மாலை கட்டுதல் ஆகிய போட்டிகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

வவுனியா கோட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் செட்டிகுளம் கோட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் அல் ஹாமியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இதில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களை பங்குபற்றுமாறு வவுனியா தெற்கு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசபாதம் தெரிவித்துள்ளார். (அ-3-266)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 . 03 . 1938

இறப்பு 25 . 05 . 2005



**திருமதி.லில்லி நேசமலர் தேவராஜா**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

நான் உங்களுக்குச் சமாதானத்தை
ஈவாக அருளி விட்டுப் போகிறேன் நான்
அருளும் சமாதானம், இவ்வுலகம் கொடுக்கும்
நிலையற்ற சமாதானத்தைப்
போன்றதல்ல; எனவே நீங்கள்
பயப்படவோ, கலங்கவோ வேண்டாம்

(யோவான் 15:27)

(8511)

நவாலி றோட்,
குளத்தடி, சங்கரத்தை
வட்டுக்கோட்டை.

தகவல்
என்றென்றும் உங்கள்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# 90ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 09 . 12 . 1985

உதிர்வு 25 . 02 . 2012



**அமரர் திரு செல்லையா ஜெயபாலன்**

(சூட்டி)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் ஒளி விளக்காய் வையத்துள்
வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து 90 நாட்கள்
கழிந்தும் உம் நினைவுகள் எம்மை விட்டு
நீங்கவில்லை என்றும் உம் நினைவால்
துயருறும் உம் உறவுகள்!

புதூர் சந்தி,
புதூர், புளியாங்குளம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

# மாகியப்பிட்டிச் சிறுவன் ரஜிராம் கடத்தல்

# குற்றமும் அதன் பின்னணியும்



சிறுவன் ரஜிராம்

ஒரு வருடத்தின் முன்பு கடத்திச் செல்லப்பட்ட மாகியப்பிட்டி சிறுவன் ரஜிராம் மீட்கப்பட்ட சம்பவம் கடந்த சில நாட்களாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் குடாநாட்டில் கடந்த காலங்களில் பல சிறுவர்கள், சிறுமிகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதில் சிலர் மீட்கப்பட்டுள்ளனர். பலர் மாயமாகியுள்ளனர். இன்னும் சிலர் உயிரிழந்த நிலையில் பற்றைகளுக்குள் இருந்து சடலமாகவும் மீட் கப்பட்டுள்ளனர்.

மாய்மனாவர்கள் மீட்கப்பட்டால் அது மகிழ்ச்சியானதே. ஆனால் கடத்திச் செல்லப்பட்டு ஒரு வருடத்தின் பின் மீட்கப்பட்ட ரஜிராம், மகிழ்ச்சியோடு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளான்.

கடந்த வருடம் அதாவது 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 8ஆம் திகதி பாடசாலைக்கு சென்று கொண்டி ருந்த 12 வயதுச் சிறுவனான மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை சேர்ந்த பரமநாதன் ரஜிராம் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

பாடசாலைக்குச் சென்ற தனது மகன் வீடு வந்து சேரவில்லை என பதறிப்போன தாய் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.



பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பரிசு பெறும் ரஜிராம்

அத்தோடுமனிதவுரிமைஆணைக்குழுவின் யாழ் பிராந்தியக் காரியாலயத்திலும் தனது மகன் காணாமல் போயுள்ளான் என ரஜிராமின் தாய் முறையிட்டுள்ளார்.

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வளர்ந்த சிறுவன் ரஜிராம் கடத்தப்பட்ட சம்பவம் அக்காலப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த போதும் காலப்போக்கில் அந்தப் பரபரப்பு சிறுவன் ரஜிராமின் தாய்க்கு மட்டுமே சொந்தமானது.

தனது மகன் யாரால் கடத்தப்பட்டான்? எங்கு கொண்டு செல்லப்பட்டான்? என்ன செய்து கொண்டிருக்கின்றான்? எனப் பல கேள்விகளுக்கு ஒரு வருடத்தின் பின்பே பதில் கிடைத்துள்ளது .

பெற்றோர்களை இழந்த பிள் ளைகளும் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் பின் தமிழினத்தில் கணக்கிட முடியாத அளவில் உள்ளனர்.

இந்நிலையில் சிறுவன் ரஜிராம் போன்றவர்கள் சிலரது சுயநலத்திற்குட்பட்டு அநாதைகள் ஆக்கப்படுகின்றனர்.

சுமார் ஒரு வருடம் தனது தாயைப் பிரிந்து, தாயின் அரவணைப்பை இழந்து வாழ்ந்துள்ளான் சிறுவன் ரஜிராம்.

12 வயதில் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஒரு வருடகாலம் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய தேவைதான் என்ன?

தந்தையை இழந்த போதும் தாயின் பாசத்துடன் தனது எதிர் காலக் கனவுகளுடன் சண்டிலிப்பாய் இரட்டையபுலம் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சென்ற சிறுவனுக்கு ஏன் இத்தனை கொடுமைகள்?

12 வயதில் சம்பளம் இல்லாது வீட்டு வேலைக்காரனாக பணிபுரிய வேண்டிய தேவைதான் என்ன?

குடும்பத்தலைவனை இழந்த போதும் தன் குடும்ப சுமைக்காகக் கூட தன் மகனை வேலைக்கனுப்பாது பாடசாலைக்குத் தான் அனுப்பிவைத்துள்ளார் இந்தத் தாய்.

ஒரு வருடத்தில் 12 வயது சிறுவன் மொழி உச்சரிப்பில் மாற்றம், மத மாற்றம், உடை மாற்றம் போன்றவற்றுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளான்.

மொழி உச்சரிப்பு மாற்றம், உடை மாற்றம் என்பனவற்றை விடுத்தாலும் மத மாற்றம் சிறுவனின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் இனத்தவர்களினால் கடத்தப்பட்டு அந்த மதக் கொள்கைகளுக்கு ஏற்ப சடங்குகளுக்கு உட்படுத்தப்பட்டால் முஸ்லிம் ஆக்கப்பட்டுவிடுவானா? தமிழ் சிறுவன் அவ்வாறு ஆக்கப்பட்டாலும் அவனால் முஸ்லிமாக வாழமுடியுமா?

யாழப்பாணத்தில் பிறந்து மட்டக்களப்பு காத்தான்குடியில் முஸ்லிமாக மாற்றப்பட்டு முஸ்லிம் குடும்பத்திற்கு வேலைக்காரனாக அமர்த்தப்பட்ட ரஜிராம் ஒரு வருடம் பட்ட துன்பம் தனது தாயிடம் சேர்ந்த போதும் முழுமையாக நீங்கவில்லை.

வீட்டு வேலைக்காரனாக இருந்துபட்ட துன்பமும் புடைவைக்கடையில் சேவகனாகி பட்ட வேதனையும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள கவலையும் சிறுவனை விட்டு நீங்க நீண்டகாலம் எடுக்கும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காகவும் சிகிச்சைக்காகவும் பொலிஸ் பாதுகாப்பில் சிறுவன் வைக்கப்பட்டுள்ளான்.

கடத்தப்பட்டு பல துன்பங்களை ஒரு வருடமாக அனுபவித்த சிறுவன் ரஜிராமுக்கு முஸ்லிமாக மாற்றப்பட்ட தமிழ்ச் சிறுவன் என்ற முத்திரை குத்தப்பட்டு விட்டது.

இதிலிருந்து மீள்வதற்கு நீண்டகாலம் தேவைப்படும் நிலையில் தொடர்ந்தும் மன அழுத்தங்கள் ஏற்படுவது சிறுவனின் எதிர் காலத்தை பாதிக்கக்கூடியது.

சிறுவர் கடத்தல் சம்பவம் அதன் பின்னணியில் நடைபெறும் சதித் திட்டங்கள் சிறுவன் ரஜிராம் மீட்கப்பட்டதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனலாம்.

இருப்பினும் சிறுவன் ரஜீராம் மட்டும்தான் குடா நாட்டிலும் சரி இந்த நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சரி கடத்தப்பட்டவன் அல்ல.

பல சிறுவர்கள் கடந்த காலங்களில் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தல்களுக்கு உள்ளான சிறுவர்கள் சிறுவன் ரஜிராம் போன்று மதம் மாற்றப்பட்டு வீட்டு வேலைக்கும், அடிமைத் தனத்துக்கும் ஆளாக்கப் பட்டிருக்கலாம்.



தாயார் வதனிவஸ்தலா

## என் மகனைத் தேடி ஒரு வருடமாக அலைந்தேன்

எனது மகன் ரஜிராம் கடந்த ஒரு வருடமாக என்னை விட்டு பிரிந்திருந்தான். அந்த காலப்பகுதியில் நான் வேண்டாத தெய்வம் இல்லை. வைக்காத நேர்த்தி இல்லை.

மீண்டும் எனது மகன் கிடைத்ததில் நான் மிகவும் சந்தோஷமடைந்திருந்தேன். ஆனால் அந்த சந்தோஷம் முழுமையாக எனக்கு கிடைக்கவில்லை.

கடத்திச் சென்றவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டனர். ஆனால் கடத்தப்பட்ட எனது மகனோ ஒரு கைதியைப் போன்று காலில் விலங்கிடப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

**சந்திப்பு : எஸ். கரன்**
**படங்கள் : உ. சாளின்**

இதனால் சிறுவர் பராமரிப்பு அதிகார சபைக்கு அறிவித்து அவர்களிடம் எனது மகனின் நிலை குறித்து எடுத்துக் கூறியிருந்தேன்.

எனது மகன் பொய் சொல்லவில்லை, களவெடுக்கவில்லை இருப்பினும் கைதியைப் போன்று நடத்தப்படுகின்றான்.

எனது மகன் கடத்தப்பட்டு விட்டான் என்ற தகவல் அறிந்த நாளிலிருந்து சரிவர சாப்பிட்டதில்லை. சந்தோஷமாக இருந்த தில்லை. எவ்வளோவோ கஷ்டங்களை அனுபவித்திருந்தேன். மகன் கிடைத்த பின்பும் அந்த துன்பம் என்னை தொடர்கின்றது.

ஒரு வருடமாக என்னை விட்டுப் பிரிந்து இருந்ததனால் வீட்டுக்கு வரப்போகின்றேன் தன்னையும் என்னுடன் கூட்டிச் செல்லுமாறு அழுதான் எனது மகன். இருந்தும் அவனை என்னுடைய வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வரமுடியவில்லை.

எனது மகனை பிரிந்து நான் ஒரு வருடம் பட்ட துன்பத்தைப் போன்று வேறேந்த பெற்றோரும் துன்பப் படக்கூடாது.

பிள்ளைகளைக் கடத்தும் கும்பல்களை ஒழித்து என்னைப் போன்று ஏனைய பெற்றோர்களும் தமது பிள்ளைகளை இழந்து தவிப்பதை தடுக்க வேண்டும்.

மகனைப் பிரிந்த சோகத்தில் நான் வாடிக் கொண்டிருக்கும் போது அவனைக் கடத்தியவர்களுடன் தொடர்புடைய நபர்கள் "நீங்கள் பிள்ளையை சரிவர பராமரிக்காததனால் தான் உங்கள் பிள்ளை உங்களை விட்டு ஓடிப் போனான்" என ஏளனமாக விமர்சிக்கப்பட்டேன்.

எனது மகனை நான் துரத்தியிருந்தால்- அவன் உங்களிடம் வந்திருந்தால் அவனை பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டியது தானே? ஏன் காத்தான் குடிக்கு கொண்டு சென்றிருக்க வேண்டும்?

இது தவிர மகன் காணாமல் போன சில தினங்களில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கப்பம் கேட்டு சிலர் என்னைத் தொலைபேசியினூடாக மிரட்டியிருந்தனர்.

கேட்கும் பணத்தைக் கொடுத்தாவது எனது மகனை மீட்போம் என கிளிநொச்சிக்கு சென்றிருந்தேன். இருப்பினும் எனது மகனை அங்கு கொண்டு வரவில்லை.

இவ்வாறு எனது மகன் காணாமல் போன காலத்தில் இரு ந்து பெரும் துன்பங் களை அனுபவித்ததோடு பெரும் தொகை யான பணத்தை அவனைத் தேடி திரிவதில் இழந்து விட்டேன்.

இருப்பினும் எனது மகன் மீண்டும் கிடைத்தது மகிழ்ச்சி தான் என்றார் ரஜிராமின் தாயான வதனி வஸ்தலா.

## வெள்ளை வானில் வந்தவர்கள் என்னைக் கடத்திச் சென்றனர்

நான் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தேன் அப்போது வெள்ளை வானில் வந்து கொண்டிருந்தவர்கள் என்னை மறித்தனர்.

அவர்கள் எனது குடும்பம் தொடர்பாக விசாரித்தனர். அதற்கு பதிலளித்தேன் பின்பு அந்த வானில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

நான் போட்டிருந்த உடுப்பைக் கழற்றச் சொல்லிவிட்டு வேறு உடுப்பு கொடுத்தனர். பின்பு மட்டக்களப்பு காத்தான்குடிக்கு கொண்டு சென்றனர். அங்கு ஒரு வீட்டில் வேலை செய்வதற்கும், அந்த வீட்டுக்காரர்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு செல்வதற்கும் என்னைப் பயன்படுத்தினர். அத்தோடு யாருடனும் எனது குடும்பம் தொடர்பாக கதைக்க கூடாது எனவும் கூறினார்கள்.

எனக்கு அவர்களுடைய பாஷை முழுமையாகப் புரியவில்லை. இருப்பினும் நாட்கள் போக ஓரளவுக்குப் பழகிக் கொண்டேன்.

பின்பு யாழ்ப்பாணத்திற்கு கூட்டிக் கொண்டு வந்து புடைவைக் கடையில் விட்டனர். அப்போது உன்னைத் தெரிந்தவர்கள் யாராவது கதைத்தால் பின்பக்கமாகவுள்ள வாசல் ஊடாக தங்களிடம் வந்து சொல்லுமாறு கூறியிருந்தனர்.

# சரத்துக்கு ஜெனரல்...

பறிக்கப்பட்ட, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜெனரல் பதவிநிலை மீண்டும் வழங்கப்படுவதென்பது சாத்தியப்படாத விடயமே என்று அமைச்சரவையின் பதில் பேச்சாளரும் பிரதியமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. இதன்போது, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஜெனரல் பொன்சேகா என்றும் அழைக்க முடியுமா? என்று ஊடகவியலாளர்கள் சிலர், அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பிரதியமைச்சர்,

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் இராணுவ நீதிமன்றத்தின்கீழ்சுமார்7ஆயிரத்து500பேருக்கு தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளார். அப் படிப்பட்ட ஒருவர் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து நன்றாக அறிந்திருப்பார்.

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஒருவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இதன் பிரகாரமே சரத் பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த மன்னிப்பின் மூலம் தேர்தலுக்கான உரிமை தவிர்ந்த அனைத்து உரிமைகளும் சரத் பொன்சேகாவிற்கு கிடைக்கப் பெறுகின்றது. இருப்பினும் இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு விடயத்தில் ஜனாதிபதி ஒரு போதும் தலையிட மாட்டார்.

அதனால், இராணுவ நீதிமன்றினால் சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்ட ஜெனரல் பதவி மீண்டும் கொடுக்கப்பட வாய்ப்பில்லை.

### பதிலளிக்கமுடியாது

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேசத்தின் முன் சென்று விளக்கமளிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை. இது தொடர்பில் சர்வதேசம் எமக்கு கடிதம் மூலம் கேள்வி எழுப்பியிருந்தது. அவ்வாறே நாமும் கடிதம் மூலம் பதிலளித்துள்ளோம்.

யுத்தக் குற்றங்களில் இலங்கை ஈடுபட வில்லை என்று அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இதனையே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் வலியுறுத்தியுள்ளார்.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட வில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், யுத்தக் குற்றங்களுக்கான சான்றிதழை சர்வதேசத்திடம் கொடுக்க எவராவது முயற்சித்தால் அவர்களின் நோக்கம் தவறானதாகவே இருக்கும்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சிறந்த போர் வீரராவார். அவரது திறமையைக் கருத்தில் கொண்டும், அவரது இராணுவ சேவைக்கு மதிப்பளிக்கும் வகையிலுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கினார்.

யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கு சரத் பொன்சேகாவின் தலைமைத்துவம் சிறந்து விளங்கியது. அவர் என்ன பிழைகள் செய்தாலும் அவர் நாட்டுக்காக ஆற்றிய சேவை அளப்பரியது.

அதனாலேயே யுத்த வெற்றியின் மூன்றாம் ஆண்டில் அவர் விடுதலை பெற வேண்டும் என்று ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார் என பிரதியமைச்சர் மேலும் கூறினார். (எ-11)

# கைதிகளின் போராட்...

அரசாங்கத்தின் சார்பில் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை அடுத்து நேற்று அவர்களைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறியதை அடுத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க நேற்று முன்தினம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் எமக்குபதில் அறிக்கை ஒன்றைக் கையளித்தார்.

இவ்வறிக்கையில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் தேவை எனவும் அக் காலப் பகுதிக்குள் இவர்களுக்குரிய வழக்குப் பதிவு, புனர்வாழ்வு மற்றும் விடுதலை தொடர்பில் உரிய தீர்வொன்றினை அரசாங்கம் வழங்கும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து என்னுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி மற்றும் சிறிதரன் ஆகியோர் நேற்று கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூறினோம்.

அதனை ஏற்க மறுத்த அவர்கள் எவ்வாறு நீங்கள் அரசாங்கத்தினுடைய வாக்குறுதிகளை நம்புகின்றீர்கள் என எங்களிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அரசாங்கம் கூறியதற்காக ஒரு கால அவகாசத்தைக் கொடுப்போம். அதற்காக நீங்கள் உண்ணாவிரதத்தை கைவிடத் தேவையில்லை.

இந்த ஒரு மாத காலப்பகுதிக்கு உண்ணாவிரதத்தை இடைநிறுத்தி வையுங்கள். இக் குறித்த காலப் பகுதிக்குள் அரசாங்கத்தால் தீர்வு வழங்கப்படாது விடின் அதன் பின்னர் நாம் செய்ய வேண்டியது குறித்து தீர்மானிப்போம் என நாங்கள் தெரிவித்தோம்.

அதற்கு அவர்களும் இணங்கி தமது உண்ணாவிரதப் போராட்டத்தினை குறித்த காலப் பகுதிக்கு இடை நிறுத்தி வைப்பதாக எமக்கு உறுதியளித்துள்ளனர் என்றார். (எ-11)

# அமெரிக்காவை திருப்...

வழமையைப் போல அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தே எடுத்துக் கூறியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும இராஜாங்கத் திணைக்களத்தின் பலதரப்பட்ட விவகாரங்களுக்கான உயரதிகாரி சமந்தா பவர் ஆகியோர் பீரிஸ் தலைமையிலான குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எடுத்துக் கூறுமாறு சமந்தா பவர் பீரிஸிடம் கேள்விஎழுப்பியுள்ளார். அத்துடன் வடக்கில்நிலை கொண்டுள்ள படைத்தரப்பினரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை போருக்குப் பின்னரான நிலைமைகளை அறிந்து கொள்ள இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சமந்தா பவருக்கு பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-11)


## தவறிவிட்டது

புங்குடுதீவு - 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பி. சதீஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (780350814V), சாரதி அனுமதிப் பத்திரம், Visa அட்டைகள், காப்புறுதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் உட்பட முக்கிய ஆவணங்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன அடங்கிய பேர்ஸ் பிறவுண்வீதிக்கும் ஆடியபாதம் வீதி - கொக்குவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் காணாமல் போயுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- பி. சதீஸ்
TP:- 0777 410678 (C-078)

## CAC கல்வி நிலையம்

கந்தர்மடச் சந்திக்கருகில்....

சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

சிங்களம் - கொழும்புப்புகழ்
கருணியநாதன்
Spoken and Grammer -
பிரபல ஆசிரியர்

அனைத்து வயதுப் பிரிவு மாணவர்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பம்

ஆரம்பம் - 23.05.2012 பிற்பகல் 4.00

தொடர்புகளுக்கு
இயக்குனர்
0212226402 (8487)

## அவுஸ்திரேலிய Student Visa

★ படிக்கும்போது 20 மணிநேர வேலைவாய்ப்பு
★ படித்தபின்பு நிரந்தர குடியுரிமைக்குரிய வாய்ப்பும் தொழில் வாய்ப்பும்.
★ விமான நிலையத்தில் இருந்து இலவசமாக அழைத்துச் செல்லலும் குறைந்த கட்டண தங்குமிட வசதியும்.

## UK Student Visa

★ வேலைவாய்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை
★ படித்த பின்னர் தொழில் வாய்ப்பு, குடியுரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. உடனடியாக நாடு திரும்ப வேண்டும்.
★ ————

எம்மிடம் ஆலோசனை பெற வருபவர்கள் கல்லூரிகளுக்குரிய கட்டணங்களை வங்கி ஆணை (Draft) மூலம் செலுத்துவதால் முதலுக்கு சேதமில்லை.

இன்னும் என்ன தாமதம்

உங்கள் மனதை வென்ற முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமாகிய திசைகாட்டியிடம் விரைந்து வாருங்கள்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்



தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016, 075 657 4136

கிளைகள்:
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 228 5544
22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443
504, Hampton Street, Melborn, Australia.
0061390437100, 0061412479209
(C-079)

## இலவச அழகுக்கலைப் பயிற்சி நெறி

Oriflame நிறுவனத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலவச அழகுக்கலைப் பயிற்சியின் புதிய பிரிவுகள் பருத்தித்துறையிலும் நெல்லியடியிலும் ஆரம்பிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் செய்முறை விளக்கங்களுடன் நடைபெறும். இப்பயிற்சிக்கால முடிவில் சர்வதேச தரத்திலான பெறுமதிமிக்க சான்றிதழும் வழங்கப்படும்.

பயிற்சிகள் : (Facial, Gold Facial, Makeup, Bridle makeup, Pedipure, Manipure, Eye Brow Threating)

ஆரம்பம் : 02.06.2012

இணைய விரும்புவோர் 590 ரூபாவை அங்கத்துவப் பணமாகச் செலுத்தி இணைந்து கொள்ளலாம். பருத்தித்துறை தம்பசிட்டி வீதியில் உள்ள வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவில் (FORUT) 25.05.2012 தொடக்கம் 01.06.2012 வரை தினமும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:-
சுயாதீன முகாமையாளர்
SPO - 92. Oriflame
Pointpedro.
T.P : 0778455688, 0777145404 (C-074)

## MCS நிறுவனத்திற்கும் விரிவுரையாளர்களுக்கும் எமது நன்றிகள்

CIMA, Operational மாணவர்களாகிய நாம் எமது கற்கைநெறிகளிற்காக கொழும்பை நாட வேண்டிய சூழ்நிலையிலிருந்தோம். இந்நிலையில் கொழும்பிலிருந்தும் இங்கிருந்தும் தகைமை வாய்ந்த விரிவுரையாளாகளை இணைத்தும் மிகச்சிறப்பான முறையில் விரிவுரைகளை ஒழுங்கு செய்த MCS நிறுவனத்திற்கும் மிகவும் அர்ப்பணிப்புடன் உரிய காலத்திற்கு முன்னரேயே பாடவிதானங்களை பூர்த்திசெய்த விரிவுரையாளர்களிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

CIMA @ MCS

## CIMA-UK பதிவுக்கட்டணத்திற்கான 100% புலமைப்பரிசில்-



Certified Level -26.5.2012
Operational Level- 27.5.2012
Successful Pass History!
Syllabuses are covered on Time
Approved Training centre

SMS <name>_<level> to 772 395 895 & get Scholarship

MCS IT CAMPUS
324, Palay Road, Jaffna.
For details Call us 772 395 895


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.